டிசம்பர் 2011 December | இதழ் 251 ISSUE

# தமிழர் தகவல்

# TAMILS' INFORMATION




பெற்றோர் 'ஸ்பொன்சர்' இரு வருட நிறுத்தம்

பத்து வருட 'சூப்பர் விசா'

சிறுபான்மையினருக்கு உரிய இடமில்லை

இன்னும் சிறிய தூரம்தான்

மீசை மாசம்

யானை புக்க பலம்

21 வது ஆண்டு
21th Year

Growing with the Community
ESTD-1991

a monthly information digest இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்
குயின்ரஸ் துரைசிங்கம்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

*ஆசிரியரிடமிருந்து* **From the Editor**

# மூடப்படும் கதவுகள்!

கனடிய குடிவரவுச் சட்டத்தில் அடிக்கடி கொண்டுவரப்படும் புதிய சட்டங்களும், நிர்வாக மாற்றங்களும் பெரும் அச்சத்தை ஏற்படுத்துகிறது.

பிறைன் மல்றோனியின் தலைமையில் ஆட்சியிலிருந்த 'புறொகிறசிவ் கன்சர்வேடிவ்' அரசாங்கம் இருபதாண்டுகளுக்கு முன்னர் கொண்டுவந்த குடிவரவின் நல்ல பல அம்சங்கள், ஸ்டீபன் ஹாப்பர் தலையிலான 'கன்சர்வேடிவ்' அரசினால் ஒழிக்கப்படுவதாகவே பலரும் உணருகின்றனர்.

'ஊழல்கள் அகற்றப்பட வேண்டும், தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டு அவை நீக்கப்பட வேண்டும், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்' என்பதில் எவருக்கம் இரண்டாம் கருத்து இருக்க முடியாது. அதற்காக, குற்றம் எதுவும் புரியாத, ஒழுக்கமான பிரஜைகள் தண்டிக்கப்படக் கூடாது.

தற்போதைய கனடிய மத்திய அரசு ஆட்சிக்கு வந்து முழுமையாக ஐந்து ஆண்டுகளை முடித்து விட்டது. இக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட குடிவரவு-அகதிகள் விவகார நடவடிக்கைகளில் பெரும்பாலானவையும் மக்களுக்குப் பாதகமானவை என்பதே பொதுவான கருத்து.

கப்பலில் அகதிகள் பெருமளவில் வந்ததையடுத்து தயாரிக்கப்பட்ட சட்டம் கனடிய மனித உரிமைகள் பாதுகாப்பு விதிகளுக்கு விரோதமானது. ஒரு வருடத்துக்கு விசாரணையின்றித் தடுத்து வைப்பது, குடும்பத்தினரை குறிப்பிட்ட சில வருடங்களுக்கு கனடா வராமல் தடுப்பது, அகதி மனு நிராகரிக்கப்பட்டவருக்கு போதிய சந்தர்ப்பம் வழங்காது நாடு கடத்த நடவடிக்கை எடுப்பது என்று குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவை பலவுண்டு.

சட்டத்தின் கீழ் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவர், தமது வாழ்க்கைத் துணையை 'ஸ்பொன்சர்' செய்ய ஐந்தாண்டுகள் தடை என்றால், 'குடும்ப மீளிணைவுக்கு முன்னுரிமை' என்பது எங்கே போயிற்று?

கடந்த மாதத்திலிருந்து பெற்றோர், மற்றும் பேரர்களை (parents and grand parents) ஸ்பொன்சர் செய்வதை இரண்டு வருடங்களுக்கு அரசாங்கம் இடைநிறுத்தம் செய்துள்ளது.

ஏற்கனவே தேக்க நிலையிலுள்ள 165,000 வரையான ஸ்பொன்சர் விண்ணப்பங்களைத் துரிதமாக பரிசீலனை செய்து முடிக்கவே இரண்டு வருட நிறுத்தமென்று காரணம் கூறப்பட்டுள்ளது. தேக்கநிலை ஏற்பட யார் காரணம்? கூடுதலான பணியாளர்களை நியமித்து தேக்கநிலையை நீக்கலாமே! இதனை விடுத்து, 'வாழ்வின் பின்பாதியில்' தனித்திருக்கும் பெற்றோர்களை எதற்காகத் தண்டிக்க வேண்டும்?

இதற்கான மாற்றீடாக 'சூப்பர் விசா' திட்டம் இந்த மாதத்திலிருந்து அமுலுக்கு வந்துள்ளது. உண்மையில் இது எம்மவர்க்கு நன்மையானதா என்பது சில மாதங்களில் தெரியவரும்.

அகதிகள் சேவைக்காக ஐ. நாவின் நான்சன் பதக்கம் பெற்ற கனடா, ஒவ்வொன்றாகக் குடிவரவாளரின் சகல கதவுகளையும் மூடுவதன் நோக்கம் என்ன?

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editor
Quintus Thuraisingam

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

## 21வது ஆண்டு மலர்

தமிழர் தகவல் 21வது அண்டு பூர்த்தி மலர் தயாரிப்புப் பணியில் வெளியீட்டாளர்கள் துரிதமாக செயலாற்றி வருகின்றனர். பிரசுரத்துக்கான கட்டுரைகள் அனைத்தும் தெரிவாகி உள்ளன. கட்டுரைகள் எதுவும் இனிமேல் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. புதியவர்கள் பலரின் வித்தியாசமான கருத்துகளைக் கொண்ட தரமான கட்டுரைகள் மலரில் இடம்பெறவுள்ளன.

21வது ஆண்டு மலரின் அடிநாதம், நாம்வாழும் கனடாவின் பிரதான அம்சத்தை மையமாகக் கொண்டது. இது தொடர்பான கட்டுரைகளை கனடாவிலுள்ள துறைசார் வல்லுனர்கள் பதின்மர் எழுதியுள்ளனர். இவைகள் மலரின் முதல்நிலைக் கட்டுரைகளாக இடம்பெறுகின்றன.

பன்னிரண்டு மாத இதழ்கள் வெளிவந்த பூர்த்தியில் மட்டும் மலரினை வெளியிட்டுவரும் வழக்கப்படி, 21வது ஆண்டு மலர் எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் நடைபெறும் விருதுகள் வழங்கும் வைபவத்தின்போது வெளியிடப்படும்.

விருதுகளுக்குரியவர்களைத் தெரிவு செய்யும் பணியில் தகைசார் நடுவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

2012 பெப்ரவரி இரண்டாவது வாரத்தில் நடைபெறவுள்ள விழாவில் அழைக்கப்படுபவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும். இவர்களுக்கான அழைப்பிதழ்கள் 2012 ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

விழாவில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் 416 920 9250 இலக்கத்தை அழைத்து, தங்கள் பெயரையும் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்யலாம். தாமதமின்றி அவர்களுடன் தொடர்பு கொள்ளப்படும்.

தபால் முகவரி:

Tamils' Information
P.O.Box: 3, Station-F
Toronto, Ontario.
M4Y 2L4

# பெற்றோர் ஸ்பொன்சர் இரு வருட நிறுத்தம் புதிய 'சூப்பர் விசா' அமுலுக்கு வந்துள்ளது

## Canada: A nice place to visit, but you can't apply to live here

### கனடியத் தமிழர் சமூகம் இதனால் பாதிக்கப்படுமா?


அருள் எஸ். அருளையா


லஷ்மி வாசன்


நாகா இராமலிங்கம்

பெற்றோர்களையும் அவர்களின் பெற்றோர்களையும் (பேரர்கள்) 'ஸ்பொன்சரில் விரைவாகக் கனடாவில் குடியேற அனுமதிக்க வழியமைக்க' என்ற பெயரில், இரண்டு அதிரடி நடவடிக்கைளை கனடிய குடிவரவு பிரஜாவுரிமைகள் அமைச்சர் எடுத்துள்ளார். இதன்படி முதலாவதாக, கடந்த மாதம் (நவம்பர்) 5ஆம் திகதியிலிருந்து இரண்டு வருடங்களுக்கு மேற்படி ஸ்பொன்சர் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. அடுத்து, இந்த மாதம் (டிசம்பர்) முதலாம் திகதியிலிருந்து பெற்றோர்களையும் பேரர்களையும் (Parents and Grand Parents) கனடாவுக்கு தற்காலிகமாக வருகைதர அனுமதிக்கும் 'சூப்பர் ஸ்பொன்சர்' திட்டம் அமுலுக்கு வந்துள்ளது. இந்த விசாவானது பத்து வருடங்களுக்கு வந்துபோகும் வசதியைக் கொண்ட multiple visa ஆகும். ஸ்பொன்சர் இடைநிறுத்தப்படும் இரண்டு வருட காலத்துள், தற்போது தேக்க நிலையிலுள்ள சுமார் 165,000 ஸ்பொன்சர் விண்ணப்பங்களில் கணிசமானவை முடிவுநிலைக்கு வந்துவிடும் என்று அமைச்சர் ஜேசன் கெனி அறிவித்துள்ளார். இந்தத் துரித நடவடிக்கைக்காகவே இரண்டு வருட 'ஸ்பொன்சர் நிறுத்தம்' தேவைப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கனடிய அரசு எடுத்திருக்கும் இந்த முடிவுகள் இலங்கைத் தமிழரைப் பொறுத்தளவில் சாதக பாதகமான இரு பக்க விளைவுகளையும் உள்ளடக்கியது. இதனை அறிவதற்காக புதிய குடிவரவாளர்கள் தொடர்பான செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட மூவரின் கருத்துகளைத் 'தமிழர் தகவல்' இங்கு தொகுத்துத் தருகின்றது. திரு. அருள் எஸ். அருளையா கால் நூற்றாண்டுக்கும் மேலாக இத்துறையில் நேரடியாக ஈடுபாடு கொண்டு செயற்பட்டு வருபவர். லஷ்மி வாசன் அகதிகள்-குடிவரவாளர் விவகாரத்தை முதன்மையாகக் கொண்ட கனடியச் சட்டவாளர். திரு. நாகா இராமலிங்கம் ரொறன்ரோ குடும்ப சேவை நிலையத்தில் புதிய குடிவரவாளர் மற்றும் முதியோர் விவகார ஆலோசகராகக் கடமையாற்றுபவர். இவர்கள் பார்வையில் புதிய மாற்றங்களைப் இனிப் பார்ப்போம்.

அருள் எஸ். அருளையா: கனடா வருவதற்கான எதிர்பார்ப்புடன் வருடக் கணக்கில் காத்திருக்கும் பெற்றோரின் மற்றும் பேரர்களின் ஸ்பொன்சர் விண்ணப்பங்களைத் துரிதமாக பரிசீலனை செய்து தேக்க நிலையை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது வரவேற்கத்தக்கது. இதனால், பல முதியவர்கள் இனிமேல் தாமதமன்றி கனடா வரமுடியுமானால் அது மகிழ்ச்சிக்குரியது. ஆனால், இது எவ்வளவு நேர்த்தியாக நடைபெறுமென்பதை முற்கூட்டியே சொல்ல முடியாது. குடும்பங்கள் மீளஇணைதலில் தாமதம் இருக்கக்கூடாது. அதே சமயம், இவ்வாறான முக்கிய மாற்றங்களை எடுக்கும்போது. இலங்கை போன்ற நாடுகளில் வசிப்பவர்களுக்கு, முன்னர் நடைமுறையிலிருந்தது போன்ற அனுகூலமான சிறப்பு வசதிகள் (special program) செய்யப்பட வேண்டியது அவசியம். கனடிய முறைமையில் பலமான சமுதாயமொன்றை உருவாக்க சில மாற்றங்களை அரசாங்கங்கள் அவ்வப்போது எடுக்கின்றன. இந்த வகையில், 'சூப்பர் விசா' முறை நல்ல விடயம். நீண்ட காலமாக இங்குள்ள உறவுகளைப் பார்ப்பதற்கு வர முடியாதுள்ளவர்களுக்கு இது வாய்ப்பானது. கனடாவில் நிரந்தரமாகக் குடியேற விரும்பாத பெற்றோருக்கு, multiple விசா அடிக்கடி கனடா வந்து போகும் கதவைத்



(32ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

ரொறன்ரோ நகர சபைக்குச் சொந்தமான பூங்காக்களையும், வெளியிடங்களையும் பொதுமக்கள் பாவனைக்கு விடும்போது அதற்காக கட்டணம் அறவிடுவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது. இருபத்தைந்துக்கும் மேலானவர்கள் ஒன்றுகூடும் நிகழ்ச்சியொன்றுக்கு 53 டாலர்களை அறவிட நகரசபை நிர்வாகம் விரும்புகின்றது. இதில் 27 டாலர்கள் காப்புறுதி செய்வதற்கானது. 53 டாலர்கள் அறவிடுவதை பாவனைக்கானதென்று குறிப்பிடாமல் 'பர்மிட்' கட்டணம் என்றே நகரசபை குறிப்பிட விரும்புகின்றது.

இவ்வருடம் மே மாதம் கனடாவில் நடைபெற்ற சனத்தொகைக் கணக்கெடுப்பு தொடர்பான தரவுகள் நான்கு பிரிவுகளாக எதிர்வரும் பெப்ரவரி (2012) மாதத்திலிருந்து வெளிவரவுள்ளது. முதலில் பெப்ரவரி 8ஆம் திகதி, ஆட்கள் தொகை மற்றும் குடியிருப்பு மனைகள் கட்டிடங்கள் தொகை வெளியிடப்படும். மே மாதம் 29ஆம் திகதி வயது, பால் போன்ற விபரங்கள் வெளிவரும். செப்டம்பர் 19ஆம் திகதி குடும்பங்களின் தொகை, குடியியல் தராதரம் உட்பட்ட விபரங்களும், அக்டோபர் 24ஆம் திகதி மொழி அடிப்படையிலான ஆட்களின் தரவுகளும் வெளிவரும்.

கனடியர்களில் நான்கில் ஒருவர் இரத்த அழுத்த நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாக கனடிய வைத்திய சங்க மஞ்சரி தெரிவித்துள்ளது. கடைசிக் கணக்கெடுப்பின்படி ஏறத்தாழ ஆறு மில்லியன் ஆட்கள் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். 2012-2013ஆம் ஆண்டில் இத்தொகை 7.4 மில்லியன் ஆகலாமென சங்கம் மதிப்பிட்டுள்ளது. இருபது வயதுக்கு மேற்பட்டவர்களே பெருமளவில் இரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்படுகின்றனர். 2008ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி பெண்களே கூடுதலாக இந்நோயினால் பீடிக்கப்பட்டிருந்தனர்.

கனடாவில் பாரிய நில நடுக்கங்கள் ஏற்படும் வாய்ப்பு அதிகரித்து வருவதாக புவிசார் நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். யப்பான், இத்தாலி, சீனா ஆகிய நாடுகளில் அண்மையில் ஏற்பட்ட நிலநடுக்கங்களுக்கு ஒப்பானதாக பாரிய அளவில் இங்கு எப்போதும் ஏற்படலாமென எச்சரிக்கப்பட்டுள்ளது. கனடாவின் மேற்குப் பிரதேசம் - குறிப்பாக பிரிட்டிஷ் கொலம்பியா இதனால் பெரிதும் தாக்கப்படலாமென்றும், சிறிய அளவிலான நில நடுக்கங்கள் இங்கு ஆரம்பித்துள்ளதாகவும் ஜோன் காசிடி என்னும் புவிசார் நிபுணர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு பிள்ளையும் இரண்டு வயதாகும் போது அரசாங்க பாலர் பாடசாலைக் கல்விக்கு அனுமதிக்கக்கூடியதாக கல்வி முறைமையில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. 66 வீதமான தாய்மார் வேலைக்குச் செல்பவர்களாக இருப்பதால், பிள்ளைகள் 2 வயதிலேயே பாடசாலையில் அனுமதிப்பது அவசியமாகின்றது. தற்போது ஒன்ராறியோவின் 52 வீதமான சிறார்கள் பாடசாலைகளின் பாலர் பாடசாலைக் கல்வியைப் பெற்று வருவதாகவும், 2004ஆம் ஆண்டை விட இது இரண்டு மடங்கு அதிகமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வயதில் மூத்த வாகன சாரதிகள் வீதிகளில் வாகனங்களை ஓட்டுவது முன்னெப்போதையும்விட இப்போது அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கனடாவில் வயதால் மூத்தோர் வாழும் காலம் அதிகரித்துள்ளதும், பலரும் சுதந்திரமாக வாழ்ந்து வருவதுமே இதற்குக் காரணம். இதனால், 80 வயதுக்கு மேலானவர்களின் சாரதி அனுமதியைப் புதுப்பிக்கும்போது வைத்திய பரிசோதனையுடன், மருத்துவர்களை நேரடியாக சமுகமளிக்கச் செய்யவும் ஒன்ராறியோ, அல்பேர்ட்டா மாகாண அரசாங்கங்கள் ஆலோசித்து வருகின்றன.

வீடுகளைச் சூடேற்றுவதற்கான மின்கட்டணத்துக்கு எச். எஸ். ரி. வரி நீக்கம் கொண்டுவரப்பட வேண்டுமென்பதில் ஒன்ராறியோவின் எதிர்க்கட்சிகளான கன்சர்வேடிவ்வும், என். டி. பியும் விடாப்பிடியாக உள்ளன. மாகாண அரசின் ஆரம்ப உரையை ஒன்ராறியோ லெப்பினன்ட் கவர்னர் கடந்த மாதம் 22ஆம் திகதி நிகழ்த்தியபோது, இதுபற்றி எதுவும் குறிப்பிடாததால், தனி அங்கத்தவர் பிரேரணையாக இதனை முன்மொழிய எதிர்க்கட்சிகள் ஆலோசித்துள்ளன. எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இது சமர்ப்பிக்கப்பட்டாலும், சபை விவாதிக்க சில மாதங்கள் செல்லக்கூடும்.

# முன்னாள் அதிபர் ஒன்ராறியோவின் புதிய சபாநாயகர்

ஒன்ராறியோ மாகாண அரசாங்கத்தின் புதிய சபாநாயகராக பிறன்ட் தொகுதியின் உறுப்பினரான டேவ் லெவாங்க் கடந்த மாதம் 21ஆம் திகதி தெரிவானார். இவர் பாடசாலை ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்ற பின்னர், 1999ல் முதல் தடவையாக ஒன்ராறியோ மாகாண சபைக்கு லிபரல் கட்சி ஊடாகத் தெரிவானார்.

புதிய சபாநாயகர் பதவிக்குத் தெரிவு செய்யப்படுவார் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்ட எற்றோபிக்கோ மத்திய தொகுதி உறுப்பினரான டொன்னா கன்ஸ்பீல்ட் எதிர்பாராத தோல்வியைச் சந்தித்தார். லிபரல் கட்சியைச் சேர்ந்த நால்வர் சபாநாயகர் பதவிக்குப் போட்டியிட்டனர். முதற் சுற்றில் டேவ் லெவிக்கும், டொன்னா கன்பில்டும் தலா 43 வாக்குகளைப் பெற்று முன்னணியில் நின்றனர். இரண்டாவது சுற்றில் இருவரும் நேரடியாகப் போட்டியிட்டபோது டேவ் லெவாக் தெரிவானார். மாகாண கன்சர்வேடிவ் மற்றும் என் டி. பி கட்சியினருக் கூடுதலாக இவருக்கே வாக்களித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சபாநாயகருக்கான வருடாந்த சம்பளம் 152,914 டாலர்கள். அத்துடன் சகல வசதிகளும் கொண்ட வீடு ஒன்றும் குடியிருக்க வழங்கப்படும். மாகாண சபை உறுப்பினர்களுக்கான வருடாந்த சம்பளம் 116,5000 டாலர்கள்.

# வல்வெட்டித்துறை கடலோடிகள் புத்தக வெளியீடு

ஈழத்துப்பூராடனாரின் (அமரர் க. தா. செல்வராஜகோபால்) 'வல்வெட்டித்துறை கடலோடிகள்' புத்தக வெளியீட்டு வைபவம் இந்த மாதம் 11ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஐந்து மணிக்கு கனடா கந்தசுவாமி கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தமிழரின் கப்பல் கலையை எடுத்துக்கூறும் இந்தப் புத்தக வெளியீட்டு வைபவத்துக்கு அனைவரையும் வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் அழைக்கின்றனர்.

தொடர்புகளுக்கு:
சிவா - 905 673 0314
விஷ்ணுசுந்தரம் - 647 221 7038
இதயச்சந்திரா - 416 975 9674.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றொறன்ரோ பெரும்பாகத்தில் சிறுபான்மையினர் 40 வீதம் ஆனால் நகரசபை உறுப்பினர்கள் 7 வீதம் மட்டுமே; 12.6 வீதமான தெற்காசியரிலிருந்து 4 உறுப்பினரே தெரிவு!

றொறன்ரோ பெரும்பாகத்தில் வசிப்பவர்களில் 40.29 வீதமானவர்கள் அடையாளம் காணப்பட்ட சிறுபான்மையினர். ஆனால், இந்தப் பிராந்தியத்திலுள்ள உள்ளூராட்சிச் சபைகளில் இவர்களின் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் வெறுமனே 7 வீதம் மட்டுமே. கனடாவின் பிரபலமான இதழான 'றொறன்ரோ ஸ்டார்' கடந்த மாதம் ஏழாம் திகதிய இதழில் தேவையான தரவுகளுடன் இதனை வெளியிட்டுள்ளது.

அரேபியர்கள், கறுப்பினத்தவர், சீனர், பிலிப்பினோவினர், ஜப்பானியர், கொரியர், லத்தீன் அமெரிக்கர், தெற்காசியர், தென்கிழக்காசியர், மேற்கு ஆசியர் ஆகியோரே அடையாளம் காணப்பட்ட சிறுபான்மையினர் என்று இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள், றொறன்ரோ பெரும்பாக குடித்தொகையில் 40 வீதத்துக்கும் அதிகமானவர்கள். இவர்களுள் ஆகக்கூடியவர்களாக தெற்காசியர் 12.60 வீதம் வசிக்கின்றனர். ஆனால், இவர்களின் பிரதிநிதிகளாக 4 பேர் மட்டுமே உள்ளூராட்சிச் சபைகளில் உள்ளனர். இது 1.6 வீதம் மட்டுமே என்றும் 'றொறன்ரோ ஸ்டார்' ஆய்வுக் கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கனடாவின் மூன்று கட்ட (மத்திய, மாகாண, மாநகர) அரசாங்கங்களிலும் றொறன்ரோ பெரும்பாகத்திலிருந்து 347 உறுப்பினர்கள் (எம்.பிக்கள், எம். பி. பிக்கள், மாநர சபைகளின் உறுப்பினர்கள்) மக்களால் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 11 வீதத்தினர் மட்டுமே சிறுபான்மையினங்களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடிய மத்திய அரசுக்கும், ஒன்ராறியோ மாகாண அரசுக்கும் மற்றும் ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள மாநகர சபைகளுக்கும் இந்த வருடத்தில் தேர்தல் நடைபெற்றது. றொறன்ரோ பெரும்பாகத்தில் 47 தேர்தல் தொகுதிகள் உள்ளன. இங்குள்ள வாக்காளர்களில் 25 வீதமானவர்கள் சிறுபான்மை இனத்தவர்கள். இங்கு 17 வீதமான இடங்களை சிறுபான்மையினத்தவர் பிடித்துள்ளனர். ஆனால், இதே பிரதேசத்திளைப் பிரதிநிதித்துவிப்படுத்தும் நகரசபையின் 253 உறுப்பினர்களில் 7 வீதமானவர்கள் மட்டுமே சிறுபான்னையினர் என்பது அதிர்ச்சி தரும் தகவல்.

மத்திய அரசின் பிரதிநிதிகளில் தெற்காசியர்களும் (சீக்கிய சமூகத்தவரே பெரும்பான்மையினர்), மாநகராட்சிகளில் சீன சமூகத்தவர்களும் அதிக இடங்களைப் பிடித்துள்ளனர். இரு அணியினரும் பெற்றுள்ள மொத்தத் தொகை 15. ஆனால், அரபியர், பிலிப்பினோவினர், வெள்ளையரல்லாத லத்தீன் அமெரிக்கர், மற்றும் தென்கிழக்காசிய சமூகத்தவர் ஒருவர் கூட எந்தச் சபைகளிலும் இடம்பெறவில்லை. இவர்களின் பிரதிநிதித்துவம் 0 ஆகும்.

றொறன்ரோ பெரும்பாகத்தில் 905 பகுதிகளிலேயே சிறுபான்மையினத்தவர் பெருமளவு பெற்றி பெற்றுள்ளனர். 416 பகுதியில் மிகக்குறைவாகும். அரசியல் கட்சிகளில் ஆதரவின்றி சிறுபான்மையினத்தவர்கள் எந்தத் தொகுதியிலும் தேர்தலிலும் வெற்றி பெறமுடியாதென்பதையும் தேர்தல் முடிவுகள் காட்டி நிற்கின்றன. ஆனால், மாநகரசபைத் தேர்தல்களில் வேட்பாளர்களின் பெயர்களே அவர்களின் அடையாளமாக முன்னுரிமை பெறுகின்றன.

ஒன்ராறியோ மாகாணத்துக்கு மேலதிகமாக 15 புதிய ஆசனங்கள் தேசிய ரீதியாகக் கிடைக்கவுள்ளது. புதிய தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்படுபோது 'சூப்பர்' முறையொன்று கடைப்பிடிக்கப்படுமானால், அடையாளம் காணப்படும் சிறுபான்மையினத்தவருக்குக் கூடுதலான இடங்கள் கிடைக்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழர்களைப் பொறுத்தளவில் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராகவும், ஒருவர் மாநரசபை உறுப்பினராகவும் தற்போது இருக்கின்றனர்.

# அகதிகளை விசாரிக்கும் 50 வீதமான நீதிபதிகள் 2012க்கான தகுதிகாண் பரீட்சையில் தோல்வி

அகதிகளின் தலைவிதியை நிர்ணயிக்கும் குடிவரவு அகதிகள் சபை உறுப்பினர்களில் (நீதிபதிகள்) ஐம்பது வீதமானவர்கள், புதிய குடிவரவுச் சட்டம் தொடர்பான பரீட்சையில் சித்திபெறத் தவறியுள்ளனர் என்ற தகவலை கனடாவின் பிரதான மைய ஊடகமான கனடிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (CBC) அறிவித்துள்ளது.

இதனால், 2012ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வரவுள்ள புதிய குடிவரவு அகதிகள் சட்ட அடிப்படையில் விசாரணைகளை நடத்திப் புதியவர்களைத் தெரிய வேண்டிய தேவை குடிவரவு அகதிகள் சபைக்கு ஏற்பட்டுள்ளது.

தற்போது சேவையிலுள்ள அகதிகள் விசாரணை நீதிபதிகள், புதிய சட்ட நடைமுறையின் கீழும் பணியாற்ற விரும்பினால் விண்ணப்பம் செய்ய வேண்டுமெனக் கோரப்பட்டனர். இதற்கமைய விண்ணப்பித்த 63 பேரில், 32 பேர் பரீட்சையில் சித்திபெறத் தவறியுள்ளனர்.

முதலாவதாக இடம்பெற்ற பல விடைகளில் ஒன்றைத் தெரியும் மற்றும் எழுத்துப் பரீட்சையில் (multiple choice and written exams) 24 பேர் தோல்வியடைந்தனர். மேலும் 12 பேர் விண்ணப்பத்தை மீளப்பெற்றனர், அல்லது பரீட்சையில் சித்தியடையவில்லை. பத்து நீதிபதிகள் மட்டுமே நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்தனர்.

புதிய குடிவரவுச் சட்டம் (Bill C 11) எதிர்வரும் ஜூன் மாதத்தில் நடைமுறைக்கு வருமென எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் து. சூரியபாலன்

# இரத்தக் குழாய்கள்: தடைபடும் காரணமும் தவிர்க்கும் வழிகளும்

மாரடைப்பைப் பற்றியும் Angina என்று கூறப்படும் நெஞ்சு நோவைப் பற்றியும் கடந்த மாதம் பார்த்தோம். இந்த இரண்டு நோய்களுக்கும் காரணம் இரத்தாசயத்துக்கு ஒட்சிசன், குளுக்கோசு முதலியவற்றைக் கொண்டு செல்லும் இரத்தக் குழாய்கள் தடைப்படுவதே என்றும் அறிந்தோம். அதைப் பற்றிச் சுருக்கமாகக் கூறப் போனால், எங்களுடைய Coronary இரத்தக் குழாய்களில் ஏதாவது ஒன்று முற்றாகத் தடைப்பட்டால் மாரடைப்பு ஏற்படுகின்றது. அதேவேளை தடை சிறிதாக இருந்து கொஞ்ச இரத்தமாவது இரத்தக் குழாய்கள் மூலம் போனால், இரத்தாசயம் கூடியளவு வேலை செய்ய நேரிடும் பொழுது மாத்திரம், Angina என்னும் நெஞ்சு நோவை அனுபவிக்கின்றோம்.

மாரடைப்பால் ஏற்படக்கூடிய நெஞ்சு நோ நாங்கள் ஒன்றும் செய்யாமலோ அல்லது படுத்திருக்கும் பொழுதோ வரக்கூடியது. Angina நோ நாங்கள் கூடிய தூரம் நடக்கையிலோ, படிகளில் ஏறும் பொழுதோ, பஸ் பிடிப்பதற்கு ஓடும் பொழுதோ, குளிரில் நடக்கையிலோ, கடினமான வேலைகள் ஏதாவது செய்கையிலோ, கூடியளவு சாப்பிட்ட பின்போ ஏற்படலாம். இந்த நோ, ஓய்வெடுப்பதால் குறைந்துவிடும். ஆனால் மாரடைப்பால் ஏற்படும் நெஞ்சு நோ மிகவும் தாங்கமுடியாத, நெஞ்சை இறுக்குவது போன்ற நோ மாத்திரமன்றி அது குறைந்தது 30 நிமிட நேரமாவது நீடிக்கின்றது. ஒன்றும் செய்யாமல் ஓய்வெடுத்தாலும் இந்த நோ நோயாளிகளைத் தொடர்ந்தும் வருத்தும்.

இந்தக் கட்டுரையில் Coronary இரத்தக் குழாய்கள் தடைபடுவதற்கு என்ன காரணம் எனவும் அதை தடுப்பதற்கு நாங்கள் கையாளக்கூடிய நிவாரணங்களையும் பார்ப்போம். எங்களுடைய இந்த இரத்தக் குழாய்கள் நோய்வாய்ப்பட்டு தடைப்படுவதைக் குறிக்கும் சொல் Atherosclerosis. இந்த இரத்தக் குழாய்கள் கொலஸ்ரரோல் எனப்படும் கொழுப்புப் பதார்த்தத்தால் தடைபடுகின்றன. அதாவது இந்தக் கொழுப்புப் பதார்த்தங்கள் இரத்தக் குழாய்களின் சுவர்களில் படிவடைவதால் இதன் துவாரங்கள் படிப்படியாக குறுகுகின்றன. இப்படி கொலஸ்ரரோல் படிவதற்குச் சில காரணங்கள் உண்டு. இதனை Risk factors என்போம். இந்த மாதிரியான காரணகர்த்தாக்கள் எமதுடம்பில் காணப்படுமானால், எங்கள் இரத்தக் குழாய்களில் கொழுப்பு படிந்து, அவை தடைபடுவதற்கு போதிய வாய்ப்புகள் உண்டு. இந்தக் காரணகர்த்தாக்களில் ஒன்றாவது தனிப்பட்ட முறையில் இயங்குவதில்லை. அவை எல்லாம் சேர்ந்து காணப்படும் வேளையில் இரத்தக் குழாய்கள் தடைபடுவதற்கு ஏற்ற சூழ்நிலையை அடைகின்றது. இந்தக் காரணிகளை பொதுவாக இரண்டு பகுதியாகப் பிரித்து ஆராயலாம்.

முதலாவது எமது உடம்பில் காணப்படும் காரணி. (Host factor). இரண்டாவது எமது சூழ்நிலையில் காணப்படும் காரணி (Environment factor). உடம்பில் காணப்படும் மிக முக்கியமான காரணி எதுவென்றால் எங்களுடைய இரத்தத்தில் இருக்கும் கொழுப்பின் அளவாகும். கூடியளவு Cholesterol இருந்தால், இந்த மாதிரியான நோய்களுக்கு ஆளாகக் கூடிய வாய்ப்புண்டு. அதேவேளையில் கூடியளவு கொழுப்பு இரத்தத்தில் இருந்தால் (Moderate increase of cholesterol level), நாங்கள் அதே வேளையில் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்களை அனுபவிப்பவர்களாக இருந்தால், அல்லது கூடிய அளவு புகை பிடிப்பவர்களாக இருந்தால், எங்களுடைய இரத்தக் குழாய்கள் கொழுப்பினால் தடைபடுவதற்கு கூடிய வாய்ப்புகள் உண்டு.

அதுமாத்திரமன்றி, பெண்களை விட ஆண்களுக்கு கூடிய பாதிப்பு கொழுப்பின் அளவினால் ஏற்படுகின்றது. ஆனால் பெண்கள் முதுமை அடையும் பொழுது இந்த வித்தியாசம் குறைந்து காணப்படுகின்றது. இன்னொரு விதமாக இதை விளக்கப் போனால் ஒரு 35 வயது ஆணுக்கும் அதே வயதுள்ள ஒரு பெண்ணுக்கும், ஒரே அளவு கூடிய கொழுப்பு இரத்தத்தில் காணப்படுகின்றது என்று வைத்துக் கொள்வோம். இந்த இருவரிலும், ஆணுக்கே இந்த இரத்தக் குழாய்கள் தடைபடுவதற்கான கூடிய வாய்ப்புகள் உண்டு. அதேவேளையில் இந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் 55 வயது எனில் இருவருக்கும் சமமான வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

அடுத்ததாக Cholesterol என்னும் இந்தக் கொழுப்புப் பதார்த்தத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகள். வைத்திய ஆராய்ச்சி மூலம் அறிவது என்னவென்றால், இரத்தத்தில் உள்ள கொழுப்பு இரண்டு விதமானவை. ஒன்றை High-Density Lipoprotien (HDL) என்றும் மற்றது Low-Density Lipoprotien (LDL) என்றும் கூறுவர். மொத்த கொழுப்பின் அளவு எனும் பொழுது HDL + LDL சேர்ந்து வரும் கூட்டுத் தொகையாகும். இந்த இரண்டு வகைகளில் முதற் கூறிய HDL, எங்களுடைய இரத்தக் குழாய்கள் தடை-படுவதை தடுக்கின்றது. அதாவது HDL எங்களுக்கு Angina, மாரடைப்பு போன்றவை வராமல் பாதுகாப்பாக இருக்க உதவுகின்றது. சிலர் இதை நல்ல கொழுப்பு என்பர். ஒன்று நல்லது என்றால் மற்றது கூடாது என்பதைக் கூறத் தேவையில்லை. ஆம், எங்களுடைய இரத்தக் குழாய்கள் தடைபடுவதற்கு மிக மிக முக்கியமான காரணமாக இருப்பது இந்த LDL என்று கூறப்படும் கொழுப்பு வகையே. இது என்னென்ன காரணத்தால் இரத்தத்தில் கூடியளவில் காணப்படுகின்றது என்பதை உணர்ந்தால் அதை கட்டுப்படுத்துவதற்கு அல்லது குறைப்பதற்கு ஏற்ற முறைகளை நாம் கையாளக்கூடியதாக இருக்கும். வைத்திய ஆராய்ச்சி மூலம் நாம் அறியும் மிக முக்கியமான காரணம் ஒன்று நாங்கள் உண்ணும் உணவில் தங்கியுள்ளது. நாங்கள் கூடியளவு Saturated fatty acids எனப்படும் கொழுப்புள்ள உணவு வகைகளை உட்கொண்டால் எங்களுடைய ஈரல் இந்த உணவு வகைகளிலிருந்து கூடியளவு LDL ஐ தயாரிக்கும். இந்த LDL ஐ தயாரிக்க உதவும் Cholesterol, Saturated fatty acids என்பன மாமிசத்தில் உள்ள கொழுப்புகளிலே அதிகளவில் காணப்படுகின்றது. மாமிசம், பட்டர், முட்டை (மஞ்சள் கரு) போன்றவைக-ளையும், Beef burgers, Sausages, Bacons, Pork போன்றவற்றை நாம் உண்பதைக் குறைக்க வேண்டும். இந்த மாதிரியான மாமிச உணவை மாரடைப்பு, Angina போன்ற வருத்தத்தால் துன்பப்படுபவர்கள் துப்பரவாக நிறுத்தி விடுதல் மிகவும் நல்லது. இந்த மாதிரியான உணவுகளில் இருக்கும் புரதத்தை வேறு பல விதமான பருப்பு வகைகளை உண்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். இதன் மூலம் எங்கள் உடலிற்குத் தேவைப்படும் புரதத்தின் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.

சுருக்கமாகக் கூறினால் மாமிசம் உண்பதிலும் பார்க்க மரக்கறி வகைகளையும், பருப்பு வகைகளையும்

(30ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# பிள்ளைகளும் கணினி விளையாட்டுகளும் Kids and Computer Games

தொழில்நுட்பம் நிறைந்த காலகட்டத்தில் எங்கள் குழந்தைகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பிறந்த நிமிடத்தில் இருந்தே அவர்களைச் சூழ எத்தனையோ தொழில்நுட்பச் சாதனங்கள் உள்ளன. ஆகவே தொழில்நுட்பக் கருவிகளைக் கையாளுவது சிறுவயதிலிருந்தே ஒரு கை வந்த கலையாக உள்ளது. அது மாத்திரமன்றி ஒரு வயது வந்தவுடன் பெற்றோரிலும் பார்க்க இவற்றைக் கையாளுவதில் திறமை மிக்கவர்களாகக் காணப்படுகின்றனர். பெற்றோரால் இவர்களின் திறமையோடு போட்டி போடுவது என்பது இயலாத காரியமாகிறது. ஏனெனில் பெற்றோர் வளர்ந்த பின்பே இதுபற்றி அறியத் தொடங்கினர். ஆகவே இத் திறமை அவர்களுக்கு இயல்பாக ஏற்படவில்லை. ஆகவே இன்றைய பெற்றோர் தொழில்நுட்பத்திற்கு அடிமையாகும் தமது பிள்ளைகளை அதிலும் கட்டிளமைப் பருவப் பிள்ளைகளை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது தெரியாது மிகவும் சஞ்சலப்படுகின்றார்கள்.

அண்மையில் கணினி மூலம் விளையாடும் ஒரு விளையாட்டினைக் கட்டுப்படுத்த பெற்றோர் முற்பட்ட காரணத்தால் (Online Game) வீட்டை விட்டு வெளியேறி பின் மரணத்தை தழுவிய 15 வயதான Brandon Crisp என்ற Barrie என்னும் இடத்தைச் சார்ந்த மாணவனின் கதையைக் கேட்டு அதிர்ச்சியும், கவலையும் அடையாதவர்கள் இருக்கவே முடியாது. பிரான்டனின் தந்தை ஸ்டீவ் கிறிஸ்ப் எந்த ஒரு தந்தையும் செய்யும் ஒரு செயலைத் தான் செய்தார். மகனின் பாடசாலை வேலையும், சமூக வாழ்க்கையும் அவர் சதா விளையாடிக் கொண்டிருக்கும் Call of Duty - 4 - Modern War Fare என்ற கணினி விளையாட்டினால் பாதிக்கப்படுவதைக் கண்டு அவரின் X Box Console ஐ பறிமுதல் செய்தார்.

கோபம் அடைந்த மகன் 15 வயதுக்குரிய முரட்டுத்தனத்துடன் வீட்டை விட்டு வெளியேறப் போவதாகக் கூறியுள்ளார். அந்த அப்பாவித்தனமான தந்தை தானும் சேர்ந்து மகனின் உடுப்புகளை அவரது பையில் அடுக்க உதவி செய்துள்ளார். "எங்கே போய் விடப் போகிறார். கோபம் அடங்கியதும் பின்னேரமே வாலைச் சுருட்டிக் கொண்டு வீட்டிற்கு வந்து விடுவார்" எனத் தாம் எண்ணியதாகக் கூறுகிறார். (He would be home later that day with his tail between his legs). Thanksgiving தினத்தன்று வீட்டை விட்டு வெளியேறிய அவர்களது ஏக புத்திரன் மூன்று நாட்களாகியும் வீடு திரும்பாத பொழுது தான் அந்த அப்பாவிப் பெற்றோருக்கு பயம் ஏற்பட்டது. ஆயிரக் கணக்கான தொண்டர்கள், அன்பான அயலவர்கள், அவனது பாடசாலைச் சமூகம், பொலிஸ் உத்தியோகத்தர்கள் என எண்ணற்ற மக்கள் தேடுதலை ஆரம்பித்தனர். பரிதாபத்துக்குரிய அந்தப் பெற்றோர் $50,000 டாலர்களை கண்டுபிடிப்பவருக்கு வெகுமதி அளிக்கவும் முன்வந்தனர். முடிவில் அவனது உயிரற்ற உடல் பற்றைகள் மத்தியில் கண்டுபிடிக்கப்பட்டது. மரம் ஒன்றில் இருந்து விழுந்து, பின் குளிரில் விறைத்து (Hypothermia) பிரன்டன் இறந்திருக்கலாம் என மரண விசாரணையில் முடிவாகியது. இந்த பெற்றோரைப் பார்த்து இரங்குவதா, வாழ்வதற்கு வேண்டிய சகல வசதிகள் இருந்தும் அல்ப ஆயுசில் தானாக ஒரு சிறு பிரச்சனைக்காக வாழ்க்கையை முடித்துக் கொண்ட கட்டிளமைப் பருவ பிரன்டனுக்காக பரிதாபப்படுவதா என ஒருவருக்கும் விளங்கவில்லை. ஆனால் இத் துர்ப்பாக்கியமான மரணம் வயதுப் பிள்ளைகளோடு எந்த நேரமும் சண்டை போடும் பெற்றோருக்கு ஒரு விழிப்புக் குரலாகும் (Wake up call).

என்ன செய்யலாம்? எப்படிப் பிள்ளைகளைக் கட்டுப்படுத்தலாம்? எங்கே எல்லைக் கோட்டைக் கீறுவது? இவ்வாறு எத்தனையோ கேள்விகள் இன்று பெற்றோரின் மனதில் உதிக்கின்றன. அந்த சமயத்தில் பாடசாலைச் சமூகத்தோடு, ஏன் இன்றைய தொழில்நுட்ப உலகத்தோடு எங்கள் பிள்ளைகளும் ஒன்றிணைந்து வாழத்தானே வேண்டும், இவர்களை இவ்வாறு விளையாடாது தடுத்தால் எவ்வாறு அவர்கள் தமது நண்பர்களோடு சரிசமமாக வாழ முடியும் என ஆதங்கப்படவும் வேண்டியுள்ளது. பிள்ளைகளுக்கு இத்தகைய விளையாட்டுக்களே இன்று சமூக உறவாகிறது (Socialize). இவை இல்லாவிட்டால் தங்கள் பொழுதை எப்படிச் சந்தோஷமாக கழிப்பதென யோசிக்கிறார்கள் (Relax). ஆகவே இவர்களின் இந்த கணினி விளையாட்டுக்களை தடை செய்தவுடன் அவர்கள் கோபம் கொள்வது இயல்பு. இதனால் இன்று பல வீடுகளில் இழுபறி ஏற்படுகிறது (Tug of War).

Cris Cowan என்னும் பிரிட்டிஷ் கொலம்பியாவைச் சார்ந்த ஆலோசகர் (Occupational Therapist) இன்றைய பிள்ளைகள் மனிதரோடு தொடர்பில்லாமலும், உடல் அப்பியாசமில்லாமலும், எந்நேரமும் கணினியோடு வாழ்வதையிட்டுக் கவலைப்படுபவர்களில் ஒருவர். அவ தனது தொழில் அனுபவத்தில் இத்தகைய நூற்றுக் கணக்கான குழந்தைகளைக் கண்டுள்ளதாகக் கூறுகிறா. அவவின் ஆய்வுகளின்படி கணினியை பாவிப்பதையோ, தொலைக்காட்சியை பார்ப்பதையோ தடுப்பதனால் பிள்ளைகளைத் திருத்த முடியாது என்பதாகும். அவற்றோடு அவர்கள் ஈடுபட்டிருக்கும் நேரத்தை தடை செய்யும் பொழுது அதற்கு ஈடு செய்யும் வகையில் அவர்களை ஈர்க்கும் ஏதாவது செயலை செய்ய ஊக்கமும், வாய்ப்புக்களையும் பெற்றோர் அளிக்க வேண்டும் என்கிறா. ஏனெனில் இன்றைய பிள்ளைகளின் வாழ்க்கை முறை (Life style) இப்பொழுது கணினியை மையமாகக் கொண்டே இயங்குகிறது. ஆகவே பெற்றோர் இவர்களோடு முதலில் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்துதல் வேண்டும். பிள்ளைகளோடு நெருக்கம் ஏற்பட்ட பின்பு கொஞ்சம் கொஞ்சமாக கணினி விளையாடும் நேரத்தைக் குறைத்தல் வேண்டும். இப்பொழுது விளையாடாத நேரத்தில் என்ன செய்வதென பிள்ளைகள் அந்தரப்படுவார்கள். அதற்கு ஆயத்தமாக குடும்பமாகச் செயல்படக் கூடிய வேறு விடயங்களில் ஈடுபடுத்துதல் வேண்டும்.

இன்று பல வீடுகளில் ஒவ்வொரு பிள்ளைக்கும் தனியறை வழங்கப்படுகிறது. ஆகவே அவர்கள் அறையில் என்ன கணினியிலோ, தொலைக்காட்சிப் பெட்டியிலோ பார்க்கிறார்கள் என்பதனை வீட்டில் உள்ளவர்கள் அறிய முடிவதில்லை. வீட்டின் அழகிற்குப் பங்கம் ஏற்பட்டாலும் பரவாயில்லை, பிள்ளைகளின் கணினி, தொலைக்காட்சிப் பெட்டி என்பன எல்லோரும் அவதானிக்கக் கூடிய இடத்தில் இருத்தல் நலம் தரும்.

பெற்றோர் பிள்ளைகளை தமது கார்களில் இட்டுச் செல்லும் நேரம் அவர்களோடு உரையாடுவது மிகவும் சுலபம். அவர்களால் எழுந்து ஓடிவிட முடியாது. நாம் சொல்வதையெல்லாம் கேட்டுத்தான் தீர வேண்டும். வீட்டிற்கு வெளியில் விளையாடக் கூடிய பல விளையாட்டுக்கள் வருடம் முழுவதும் இந் நாட்டில் காணப்படுகின்றன. அவற்றில் பிள்ளைகளைப் பதிவு செய்து நாமும் அவர்களோடு சென்று வருதல் அவர்களை ஊக்குவிப்பதாகும். கணினியில் விளையாடுவதற்கும் வெளியில் விளையாடுவதற்கும் இடையில் ஒரு சமன்பாடு இருத்தல் வேண்டும் (Balance) எனப் பிள்ளைகளுக்கு அறிவுறுத்துதல் வேண்டும். பெற்றோர் ஒரு குறிப்பிட்ட மணித்தியாலங்கள் மாத்திரமே பிள்ளைகளை கணினியில் விளையாட அனுமதிக்க வேண்டும். என்ன செய்ய வேண்டும் என்பது சம்பந்தமாக ஒரு எல்லைக்கோட்டை வரையும் பொழுது பெற்றோர் தனித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# மனமே! நலமா?

18

மனதிலிருந்து எண்ண அலைகள் புறப்பட்டு எவ்வாறு செயற்படுகின்றன என்பதை சிறு உதாரணம் மூலம் விளக்கலாம். ஏரிக்குள் ஒரு பொருளைப் போட்டால் வட்டமாக அலைகள் செல்லும். ஆனால் கீழே சென்றதும் மறைந்துவிடும். ஆனால் ஒரு சிறிய தொட்டிக்குள் தகரக்குவளை ஒன்றை அமுக்கினால் அலைகள் சென்று மீண்டும் ஒரு தடவை தரகரக் குவளையை நோக்கி வந்து தூக்கும். அதாவது, எந்த இடத்திலிருந்து சக்தி புறிப்பட்டுச் சென்றதோ, அந்த இடத்துக்கே வந்து கட்டுப்பிடுத்தியதன் பயனாக திரும்பி வலுவுடன் திரும்பி வருகின்றது.

இதுபோல, மனதிலிருந்து புறப்படும் எண்ணங்களை பரவலாகச் சிதற விடாமல் நாம் தடுத்து விட்டால் மீண்டும் மனதிடமே வந்து வலிமை பெறும். இழந்த சக்தியை மீண்டும் பெற்றால் மன வலிமை பெருகும்.

மனமும் மனதைச் சார்ந்த எண்ணங்களும் எந்நேரமும் ஏதாவது ஒரு விடயம் குறித்து, ஏதாவது ஒரு சம்பவம் குறித்து அலைமோதிக் கொண்டிருக்கும். மனதினை அடக்கி விட்டதாக நாம் நினைத்து பெருமை கொள்ளும் வேளையில் சிறியதொரு காரணத்தினால், அல்லது பிறர்கூறும் ஒரு வார்த்தையினால் சிதறிப் போய்விடலாம். 'சிந்தனையை அடக்க சும்மா இருக்கின்ற திறன் காண்பதரிது' என்பது சிவஞான சித்தர்களின் வார்த்தைகள்.

மனித மனதினைப் பொதுவாக குரங்கிற்கு ஒப்பிடுவார்கள். மரத்துக்கு மரம் தாவிச் செல்லும் குரங்கு அதனை நிறுத்துவதேயில்லை. நித்திரையிலாவது அது நிறுத்தி விடும். மனித மனமோ எப்போதும் அலைபாய்ந்து கொண்டிருக்கும். சிலவேளை நித்திரையையும் குழப்பும். இக்குழப்பங்கள் வாழ்வினையே சிதைத்துவிடும். உள்மன உணர்வோடு செய்கின்ற வேலையை வெளிமன உணர்வோடு செய்தால் அக்காரியம் சிறப்பாக அமையாது. பாதி வேலையிலேயே இப்படிச் செய்யலாமே, அப்படிச் செய்யலாமே என்ற குழப்பம் ஏற்பட்டால் வேலை முடியாது. முழுமனதோடு, உள்மன உணர்வோடு செய்தல் வேண்டும். "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின், எண்ணுவ தென்பது இழுக்கு" என்ற வள்ளுவரின் குறள் மிகவும் பொருத்தமாகும்.

பொதுவாகச் சிலர் தாங்களும் குழப்பவாதிகளாகி, மற்றவர்களையும் குழப்பிவிடுபவர்களாக இருப்பர். எந்த முடிவெடுத்தாலும் , அது சரியா தப்பா என்று அறியத் துடிப்பார்கள். மற்றவர்களிடம் ஓடியோடிக் கேட்பார்கள். நாளடைவில் கோழைகளாக இவர்கள் மாறிவிடுவர். இறுதியில் இவர்கள் அனைத்தையும் 'விதி'யின் மேல் போட்டு விடுவார்கள். தாமாகவே முயற்சி செய்து முடிக்கும் ஆற்றல் இல்லாதவர்களாக மாறிவிடுவர்.

சிலர் பிறர் கூறுவதை நம்பி ஏமாறும் மனம் படைத்தவர்களாக இருப்பர். சொந்தச் சிந்தனையற்றவர்களாக எதற்கெடுத்தாலும் ஆலோசனைக்கு அலைவார்கள். பிறர் வார்த்தை, பிறர் விருப்பம் என்றால் சுயத்தினை இழந்து விடுவார்கள். எமது வாழ்வையும் எமது விருப்பத்தையும் நாமே நிறைவேற்றப் போகிறோம். உடுப்பு எடுப்பது முதல், வீடு வாங்குவது வரை அலை பாய்ந்து செல்லும் மனதுள்ளவர்களைப் பார்க்கும்போது, பரிதாபமே ஏற்படும். 'மனதில் உறுதி வேண்டும்' என்ற பாரதியின் கூற்று ஒன்று போதுமே மனதை அடக்க!

மனதை மகிழ்ச்சியால் நிரப்புங்கள்!

மீண்டும் சந்திப்பேன்!

இயங்குதல் கூடாது. முடிவுகள் எடுக்கும் பொழுது பிள்ளைகளையும் கலந்து ஆலோசித்தல் வேண்டும். அவர்களின் விருப்பு, வெறுப்புகளுக்கும் பெரியோர் மதிப்புக் கொடுத்தல் அவசியம். Cris Cowan கூறும் இந்த அறிவுரைகள் யாவும் பெற்றோரின் பங்களிப்பு முக்கியம் என்பதையே வலியுறுத்துகிறது. எம்மில் எத்தனை பெற்றோருக்கு இது சாத்தியம் என்பது சிந்திக்கப்பட வேண்டியதொன்றா கும். அவ தனது ஒரு வருட ஆராய்ச்சி-யின் பின்பு gonein.ca என்ற வலை-மையத்தை ஆரம்பித்துள்ளா. அத்துடன் பெற்றோர், கல்விமான்களுக்கென கருத்தரங்குகளையும் வழங்கி வருகிறா. Dec 05 திகதி ரொறன்ரோவிலும் அவவின் கருத்தரங்குகள் நடைபெற உள்ளன. வசதியுள்ள பெற்றோர் இத்தகைய கருத்தரங்குகளுக்குச் செல்வதால் பயன் அடைவார்கள்.

David Bickham - Staff Scientist at Centre on Media and Child Health at Children's Hospital in Boston கூறுகிறார் - பெற்றோர் பிள்ளைகளின் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் பாவனை பற்றி அறிந்திருத்தல் வேண்டும் என்றும், நாளாந்த வாழ்க்கையில் இவற்றின் பாவிப்பை எவ்வாறு கையாளுதல் வேண்டுமென (Balanced habits) கற்றுக் கொடுப்பது பெற்றோரின் கடமையென்-கிறார். இது எமது இரண்டாம் தலைமுறை யினருக்குச் சாத்தியம். ஏனெனில் கணினி முதலிய தொழில்நுட்பக் கருவிகள் பற்றிய விளக்கங்கள் இவர்களுக்கு உண்டு. David Bickham பிள்ளைகளின் வாழ்க்கையில் இவ் விளையாட்டுக்கள் தேவையென்றும், கட்டிளமைப் பருவ வாழ்க்கைக்கு இது இன்றியமையாதது (Critical Part) என்றும் வலியுறுத்துகிறார். பருவ வயதுப் பிள்ளை-களின் மன அழுத்தத்தை குறைப்பதற்கும் (De Stressing) சந்தோஷமாகப் பொழுதைப் போக்குவதற்கும் (Relaxing) இது இவர்களுக்குத் தேவையென்பதால் இதனை தடை செய்ய வேண்டாம் என்று கூறுகிறார். அப்படியென்றால் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி எம் மனதில் எழாமல் இல்லை? எல்லைக் கோட்டை எங்கே கீறுவது என்பது தான் முக்கியம் - பெற்றோருக்கு கணினி அறிவு இருக்காவிட்டாலும் பரவாயில்லை பிள்ளைகளோடு புரிந்துணர்வு ஏற்பட்டால் எந்த ஒரு பிரச்சனையையும் சுமுகமாகத் தீர்த்து வைக்க அதுவே அடித்தளமாக அமையும் (Bottom line).

Brandon Crisp என்ற அகால மரணத்தைத் தழுவிய சிறுவன் தனது கணினி விளையாட்டின் மூலம் அறிமுகமா கிய யாராவது நபரினால் ஏமாற்றி கூட்டிச் செல்லப்பட்டிருக்கலாம் என்ற ஐயமும் முதலில் ஏற்பட்டது. இன்றைய கணினி விளையாட்டுக்களில் இத்தகைய ஒரு ஆபத்தும் காணப்படுகிறது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# இன்னும் சிறிய தூரம்தான்

இரண்டு புறநானூறுப் பாடல்கள் நினைவுக்கு வரும்படி ஒரு சம்பவம் நேற்று நடந்தது. நான் மருத்துவருடைய வரவேற்பறையில் காத்திருந்தேன். கடந்த இரண்டு மாதங்களாக மருத்துவ அறைகளில் காத்திருந்த மணித்தியாலங்களின் கூட்டுத்தொகை பத்து முழு நாட்களுக்கு சமமாக இருக்கும். அப்பொழுது அந்த தம்பதியினர் வந்தனர். இருவரும் முதியவர்கள். ஆணுக்கு 70 வயதுக்கு மேலே பெண் கொஞ்சம் இளமையானவராகத் தோன்றினார். அந்த மனிதர் அவர் காலத்தில் ராணுவத்திலோ, போலீஸ் உத்தியோகத்திலோ அதிகாரியாக கடமையாற்றியிருப்பார். அப்படி குலையாத உடல் கட்டு. அகலமான நெஞ்சு. அமெரிக்க நடிகர் ஜோன் வேய்னின் தாடையை நினைவூட்டும் முகம். அவர் சக்கர நாற்காலியில் அமர்ந்திருக்க அவர் மனைவி அதை தள்ளிக்கொண்டு வந்தார்.

உலகத்தில் நடப்பது ஒன்றுமே தெரியாமல் அவர் தலை கவிழ்ந்து நெஞ்சிலே முட்ட உட்கார்ந்திருந்தார். அவருக்கு பக்கத்தில் ஓர் ஆசனத்தில் அமர்ந்து அவர் கைகளைத் தடவிக்கொண்டே இருந்தார், மனைவி.
பெண் களைப்பாகக் காணப்பட்டார். 'நீண்டதூரம் பயணம் செய்து வருகிறீர்களா?' என்று கேட்டேன். குளிர்காலம் ஏற்கனவே தொடங்கிவிட்டாலும் பெண்ணின் முகத்திலிருந்து வியர்வை பெருகிக்கொண்டிருந்தது. மூச்சு பெரிதாக வந்தது. ஆனால் அந்த மனிதரோ ஒன்றுமே அறியாமல் தன்னை ஒப்படைத்துவிட்டு பேசாமலிருந்தார். 'நீண்ட தூரம்தான். மூன்று பஸ் பிடித்து வருகிறோம். இரண்டு மணிநேரம் முன்பாகப் புறப்பட்டோம். இந்த மருத்துவரிடம் கடந்த 30 வருடங்களாக வருகிறோம். அங்கே கிட்ட வேறு மருத்துவர்கள் இருக்கிறார்கள். என் கணவருக்கு வேறு மருத்துவரிடம் போவதற்கு விருப்பமில்லை. இந்த நாற்காலி மின்கலனில் தானாக இயங்கக் கூடியது. ஆனால் அவரால் இன்று இயக்க முடியவில்லை. அதுதான் தள்ளிக்கொண்டு வந்தேன்' என்று கூறிவிட்டு ஒரு மென்பேப்பரை எடுத்து கணவரின் வாயை துடைத்துவிட்டார். பின்னர் கணவரைப் பார்த்து மெல்லிய குரலில் 'பயப்படவேண்டாம். எல்லாம் சரியாகும்' என்றார்.

நான் நினைத்தது சரிதான். அவர் கணவர் போலீஸ் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றவர். பெரிய அதிகாரி. அவர்கள் ஒன்றாக வாழ்ந்த கடந்த 50 வருடங்களில் முதன்முறையாக கார் இல்லாமல் வாழ்வதாகச் சொன்னார். சென்ற மாதம்தான் அவர்கள் காரை விற்றார்கள். 'உங்களுக்கு கார் ஓட்டத் தெரியாதா?' என்று கேட்டேன். தெரியும், ஆனால் என்ன பிரயோசனம். என்னுடைய கணவர் சக்கர நாற்காலிக்கு மாறிய பின்னர்தான் பிரச்சினை ஏற்பட்டது. வெளியே போகும்போது அவர் நாற்காலியை இயக்குவார் அல்லது நான் தள்ளிக்கொண்டு போவேன். சிறிது தூரம் என் உதவியுடன் அவரால் நடக்கவும் முடியும். ஆனால் நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் அவரைத் தூக்கி என்னால் காரில் ஏற்ற முடியாது. வேறு ஆட்களின் உதவி தேவை. அதனால் காரினால் பிரயோசனம் கிடையாது. விற்றுவிட்டேன்.

'எப்படி பஸ்ஸில் பயணம் செய்ய முடிகிறது?' 'சக்கர நாற்காலிக்காரர்களுக்கு பஸ்சிலே ஓர் அடையாளம் போட்டிருக்கும். பஸ்ஸின் நடுவில் உள்ள கதவுகள் அவர்களுக்காக திறக்கும். பஸ்ஸிலே உள்ள இரண்டு இரும்பு அலகுகள் வெளியே வந்து நாற்காலியை அப்படியே ஆளுடன் சேர்த்து தூக்கி அலுங்காமல் உள்ளுக்கு வைக்கும். நிற்கும் இடம் வந்ததும் அதே மாதிரி இறக்கிவிடும். நல்ல வசதி' என்றார். எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவரையே உற்றுப் பார்த்துக்கொண்டு பேசாமல் நின்றேன். அவர் சொன்னார். 'ஒருகாலத்தில் என் கணவருக்கு மதிப்பான வேலை இருந்தது. கார் இருந்தது. இப்போது வேலை இல்லை. காரும் இல்லை.'

புறநானூறு பாரி மகளிரின் பாடல் நினைவுக்கு வந்தது. புலம்பல் இல்லாமல் நேராக ஓர் உண்மையை சொல்லிப் போகும் பாடல். அதன் எளிமைதான் அதன் துயர்.
அந்தநாள் அந்த வெண்ணிலா. என் தந்தை இருந்தார், ராச்சியமும் இருந்தது.
இந்தநாள் இந்த வெண்ணிலா. ராச்சியம் இல்லை, என் தந்தையும் இல்லை.

சற்று நேரம் ஒன்றுமே பேசத் தோன்றாமல் சும்மா இருந்தார். பின்னர் திடீரென்று என் பக்கம் திரும்பி 'தார் ரோட்டு முடிந்துவிட்டது. இனி வருவதெல்லாம் கல் ஒழுங்கைதான்' என்றார். அவர் என்ன சொல்கிறார் என்று புரிந்தபோது நெஞ்சு திடுக்கிட்டது.

அந்தச் சமயம் தாதி வந்து அவர்களை அழைத்தார். நாலே நாலு அடிதான் வைக்க வேண்டும். கணவரின் கையை மனைவி பிடித்தார். ' இன்னும் கொஞ்ச தூரம்தான். இன்னும் கொஞ்ச தூரம்தான்' என்றபடி அழைத்துச் சென்றார்.

என் வளைக் கரத்தை பற்றியபடி கொஞ்சம் நடவுங்கள். நிழலுக்கு போய்விடலாம். சிறிது தூரம்தான். சிறிது தூரம்தான்.

'நிரை வளை முன்கை பற்றி
வரை நிழல் சேர்க, நடத்தி நின் சிறிதே.'
புறநானூறு 255. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் பத்தாம் பக்கம்

# மீசை மாசம்

அதென்ன புதிதாய் முளைத்துள்ள மீசை மாசம் என்ற சந்தேகம் உங்களைப் போலவே எனக்கும் ஏற்பட்டது.

கடந்த மாதம் முழுவதும் உங்களின் மகனோ அல்லது இளைய சகோதரனோ அல்லது அயலில் உள்ள இளைஞனோ திடீரென மீசை வளர்க்க ஆரம்பித்திருப்பதை அவதானித்து மனதுள் மெலிதாக சிரித்திருப்பீர்கள். அவர்கள் தமது மீசையை அடிக்கடி வருடிப்பார்ப்பதும் வாரம் ஒரு முறையேனும் அதன் வளர்ச்சியைப் படம் பிடித்து முகநூலில் இட்டு அழகு பார்ப்பதும் சர்வசாதாரணமாகி உங்களை சலனப்படுத்தி இருக்கும்.

ஒரு நல்ல நோக்கத்துக்காகவே நவம்பர் மாதம் அவர்கள் மீசை வளர்த்தனர். உடல் மொழி மூலம் வித்தியாசமாக சாதிக்க முனைந்தனர்.உலகம் ஒதுக்கித்தள்ளும் சங்கதியை உற்றுப்பார்க்க வைத்து ஜெயித்தனர். சுக்கியன் புற்றுநோய் (Prostate Cancer) நிவாரண விழிப்புணர்விற்காக நிதி திரட்டுதல் என்ற உன்னத குறிகோள் அவர்களது இலட்சியமாக அமைந்தது.

Movember Foundation என்ற தர்மஸ்தாபனம் Movember.com என்ற இணையம் ஊடாக உலகெங்கும் வருடா வருடம் நவம்பர் மாதம் முழுவதும் இதனை நடத்துகின்றது.

நவம்பர் மாதத்தின் 30 நாட்களுக்கும் மீசை வளர்க்கும் இதன் அங்கத்தவர்கள் பேசும் நடமாடும் விளம்பரப் பலகைகள் போலாகி தொண்டு மனப்பான்மையுடன் கணனி மூலம் நிதி திரட்டுவர்.தனிநபர் குழு பொது என மூன்று பிரிவுகள் நிதி திரட்டலில் ஈடுபடும். ஆர்வமுள்ள எவருமே இதில் அங்கத்துவம் பெறலாம். 1999 ம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் இதற்கான திட்டம் தீட்டப்பெற்றது. எனினும் 2003 ம் ஆண்டிலேயே 30 பேருடன் இது செயற்படத் தொடங்கியது. இன்று பல நாடுகளுக்கு விரைந்து செறிந்து படர்ந்துள்ளது.

சுக்கியன் புற்றுநோய் (Prostate Cancer) நிவாரண விழிப்புணர்விற்காக இதுவரையில் 176 மில்லியன் டொலர்கள் உலகெங்குமிருந்து திரட்டப்பட்டுள்ளது. 2010 ம் ஆண்டு கனடாவில் மட்டும் 22.3 மில்லியன் டொலர்கள் மீசை வளர்த்துச் சேகரிக்கப்பட்டது. சுமார் 119 000 கனேடியர்கள் கலந்து தத்தமது முகங்களை மீசையால் மெருகூட்டியிருந்தனர்.

2011.11.15 ல் இது மீறப்பட்டுள்ளதாக கருத்துகள் கணிக்கின்றன.2011.12.08 ல் முழு விபரமும் வெளியாகும். இத்திட்டத்திற்காக மீசை வளர்ப்பவர்களை Mo Bros என்று அழைக்கின்றார்கள்.உதவியும் ஒத்தாசையும் புரியும் மகளிரை Mo Sistas எனவும் நவம்பர் மாதத்தை Movember மாதம் என்றும் குறிப்பிடுகின்றனர்.ஆழ என்பது அநாதியில் ஆங்கிலத்தில் மீசையை குறித்தது. அதனுடன் November மாதத்தின் பின் எழுத்துக்களை சேர்த்ததுதான் Movember என்றாகியது. இதனால் மீசை வளர்ப்பவர்களுக்கு நவம்பர் மாதம் மீசை மாசம் ஆனது.

Movember.com என்ற இணையத்தில் பதிவு செய்து உறுப்பினராகும் ஒருவர் Movember மாதம் முதலாம் திகதி முழுமையாக முகச்சவரம் செய்துள்ளவராகக் காணப்படவேண்டும் Movember மாதம் முழுவதும் மீசையைச் சவரம் செய்யக் கூடாது.விரும்பினால் சிறிது கத்தரிக்கலாம்.ஆனால் கன்னத்தாடியுடனோ அல்லது நாடித்தாடி யுடனோ மீசையை இணைப்பதையும் தவிர்க்க வேண்டும் என்பவை அடிப்படை நிபந்தனைகளாகும்.கடந்த வருடம் பதிவு செய்தவர்கள் மீண்டும் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். ஏற்கனவே மீசையுள்ளவர்கள் சவரம் செய்து மீள்வர்.

Shave it ! or Save it !! என்பதை டிசம்பர் முதலாந்திகதி முடிவெடுப்பது அவரவர் விருப்பமாகும்.

மேலதிக விபரங்களுக்கு:
1-855-447-6966 அல்லது
info.ca@movember.com.
அல்லது
Movember Canada,
119 Spadina Ave.,P.O.Box.65,
Toronto.Ontario.
M5T 2T2.

இந்தியா - மெக்சிக்கோ - பாகிஸ்தான் - ஜேர்மனி - ஈரான் - எகிப்து - துருக்கி - அமெரிக்கா - ஹங்கேரி - பல்கேரியா ஆகிய நாடுகள் மீசை வளர்ப்பதில் முறையே முதல் பத்து இடங்களையும் வகிப்பது வேறு கதை.

உலகின் பெரிய மீசைக்குரிய கல்யாண் ராம்ஜி சைன் என்ற இந்தியரின் மீசையின் அளவு ஒரு நுனியிலிருந்து மறு நுனி வரை 11.5 அங்குலங்களாகும என்பதும் movemberக்கு அப்பாற்பட்டது.

நாமறிந்த மீசைகளில்தான் எத்தனை ரகம்!

பாரதி மீசை- ஹிட்லர் மீசை- மா.பொ.சி மீசை- கட்டபொம்மன் மீசை - அரும்பு மீசை- பென்சில் மீசை- முறுக்கு மீசை- தொங்கு மீசை!

தமிழ் திரைப்படங்களில் மட்டும் கதாநாயகன் காவற் துறையிடமிருந்து தப்பிக்க நேரிடின் ஒட்டு மீசை நல்ல கவசமாகும் என்ற நிலை என்றுதான் மாறுமோ! ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்னையா விவேகானந்தன்

# யானை புக்க புலம்

19

அறநெறிகளுக்கு மாறுபட்டு, குடிமக்களிடத்தே வரி வாங்கும் அரசுகள் இக்காலத்தில் மட்டுமல்ல, தமிழர் ஆட்சியில் அக்காலத்திலும் இருந்திருக்கின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, நல்லியல்புகள் மிக்க கோப்பெருஞ்சோழன் சோழநாட்டை ஆட்சி செய்தான். அதே காலத்தில் அறிவுடைநம்பி எனும் மன்னன் பாண்டிய நாட்டை ஆட்சி செய்தான்.

அறிவுடைநம்பி ஆடல், பாடல் போன்ற கேளிக்கைகளில் நாட்டம் கொண்டவன். இன்பத்தில் ஊறிக்கிடப்பதிலேயே பெரும்பொழுதைப் போக்கினான். சூழவிருந்த அமைச்சுகளும், சுற்றத்தாரும் அரசனின் குறைபாடுகளைத் தமக்கு வளமாக்கினர்.

அறநெறி தவறி, மக்கள் மீது அளவிறந்த வரிகள் சுமத்தப்பட்டன. பொருள் பெறுவதற்காக மக்களுக்குப் பெருந்துன்பம் உண்டாக்கினர். நீர் ஓடுகின்ற வழியில் புற்கள் சரிந்து விழுவதைப் போல் அரசின் தவறான போக்கில், மக்கள் வாடி வதங்கினர்.

பாண்டிய நாட்டின் இத்தகைய அவலத்தை நன்குணர்ந்த சான்றோர், அரசனுக்குத் தமது துயரத்தை எடுத்துரைத்து, அவனை நெறிப்படுத்த வழியின்றித் தவித்தனர்.

அக்காலத்தே பாண்டி நாட்டில் செந்நாப்புலவராகச் சிறந்து விளங்கியவர் பிசிராந்தையர். பாண்டிய நாட்டுப் புலவராக இருந்தபோதும், கோப்பெருஞ்சோழனிடத்தே பேரன்பு கொண்டவராக இருந்தார்.

நாட்டின் சான்றோர், வேறுவழியின்றி பிசிராந்தையரை அணுகினர்.

அரசனை நெறிப்படுத்துவது நாட்டுக்காற்றவேண்டிய இன்றியமையாத பணி என்பதை நன்குணர்ந்தவர் பிசிராந்தையர். பாண்டியன் அறிவுடைநம்பியைச் சந்திக்கவேண்டி, தன் விருப்பத்தை அரசுக்குத் தெரியப்படுத்தினார்.

புலவரின் பெருமையைப் பாராட்டி பெருவேந்தரும் அவரோடு நட்புக்கொண்டிருந்ததை அறிவுடைநம்பியும் அறிந்திருந்தான். விருப்போடு புலவரைச் சந்திக்க இணங்கினான்.

மன்னா!

யானைகளுக்கு உணவாகும் நெல், அது விளைகின்ற வயலில் இருந்து எடுத்துவரப்பட்டு, கவளங் கவளமாக யானைகளுக்குக் கொடுக்கப்படுமானால், அந்த வயல் சிறிதாக இருந்தாலும், பல நாட்களுக்கு யானைகளுக்கு உணவு தரக்கூடியதாகும்.

யானைகளுக்கென பலநூறு நிலங்களில் நெல்லை விதைத்து விட்டு, முற்றி விளைந்த நெல் சாய்ந்து கிடக்கையில், யானைகளை வயலில் இறக்கி மேயவிட்டால் என்னாகும்?

வாயினால் அவை உண்பதைவிட, கால்களினால் சிதைக்கப்படுகின்ற நெற்களே அதிகமாகும்.

அரசன் அறவழியோடு கூடிய நெறிமுறையறிந்து, மக்களிடத்தே வரி பெற வேண்டும். அவ்வாறாயின் வளமும் புகழும் பெருகும். இதை விடுத்து, முறையறிந்து, வரியைப் பெறுகின்ற திறனற்ற சுற்றத்தோடு, வேந்தனும் அறிவில் குறைந்தவனாக, குடிமக்களிடத்தே அன்பின்றி, வரிகளை வலிந்து பெறுவானாகில், யானை புகுந்த நிலம் போல, பொருள் வந்து சேராது. நாடு கெட்டழியும்.

வளைந்தறியா உறுதியோடு, நெகிழ்தொழுகும் தமிழால், அறிவுடைநம்பிக்கு அறிவுரை ஓதினார் பிசிராந்தையர்.

காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே

மாநிறை வில்லதும் பன்னாட் காகும்

நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே

வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்

அறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே

கோடி யாத்து நாடுபெரிது நந்தும்

மெல்லியன் கிழவ னாகி வைகலும்

வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு

பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்

யானை புக்க புலம்போலத்

தானு முண்ணா னுலகமுங் கெடுமே. (புறம் 184)

உரைப்பதிலே உறுதி புலவருக்கு இருந்ததைப்போல, குறையுணர்ந்து தெளிகின்ற அறிவு அக்கால அரசர்க்கு இருந்தது. அறிவுடைநம்பி அறிவுடையவனானான்.

இக்காலத்தேயும் அறந்தவறுகின்ற அரசுகள் இருக்கின்றன. ஆனால் இடித்துரைக்க முற்படுவோர் இல்லாதொழிக்கப்படுகின்றனர். பிணம் உண்ணும் சட்டங்களுடன் சாத்தான்கள் ஆட்சி செய்கையில், உறங்கிக் கிடப்பதைத் தவிர அறநெறிகளால் வேறு என்ன செய்ய முடியும்?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## தந்தையை உருக வைத்த புதல்வர்களின் அன்பளிப்பு

தங்கள் தந்தைக்கு எதிர்பாராத பரிசு ஒன்றை அவரது இரு புதல்வர்கள் வழங்கியபோது, அதனைப் பார்த்ததும் தந்தை கண்ணீர் மல்கி அழுது விட்டார்.

அந்தப் பரிசு 'செவர்லட்' கம்பனியின் 1964 இம்பாலா கார். இந்த வாகனத்தை 1965ல் வாங்கிய அரிசோனாவைச் சேர்ந்த ஹேர்ப் யங்கர் என்பவர், 1980ல் தமது புதல்வர்களின் கல்விச் செலவுத் தேவைக்காக விற்க நேர்ந்தது.

முப்பது ஆண்டுகளின் பின்னர் தங்கள் உழைப்பின் சேமிப்பில் கிடைத்த பணத்தில், கனடாவில் ஒருவர் பயன்படுத்திக் கொண்டிருந்த அதே இம்பாலா வாகனத்தை தேடிப் பிடித்து வாங்கிய புதல்வர்களான் டெரக், ஜரட் ஆகியோர் தமது தந்தையிடம் எடுத்துச் சென்று வழங்கி, அதிர்ச்சி ஊட்டினர்.

தமது 'இம்பாலா'வை மீண்டும் கண்டதும் அதனைச் சுற்றி வலம் வந்த தந்தை கண்ணீர் மல்கி அழுது விட்டார்.

## கேட்பதற்கு யாருமில்லை; எல்லாம் 'சிவ'மயமே!

கனடிய தமிழ் எழுத்தாளர்களை இணைக்கவென உருவான அமைப்பு இது. சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டது.

இதன் ஆண்டுக் கூட்டம், நிர்வாகிகள் தெரிவு என்பவற்றுக்கு திட்டமிட்ட காலவரையறை உண்டு. இப்போதைய தலைமை அவைகளில் அக்கறையின்றி தன்போக்கில் ஓடுகிறதாம்.

அடுத்த தலைவர் இன்னார்தான் என்று தீர்மானிக்கப்பட்ட நிலையிலும், அவரை இலகு காக்கும் நிலையில் வைத்துள்ள நிகழ்கால தலைவர், பொதுக்கூட்டத்தை நடத்தாது இழுத்தடிக்கிறாராம்.

இணைய ஆரம்பகர்த்தாக்களான மொன்றியல் இரட்டையர்கள், நடப்பவை எதுவும் தெரியாது இருட்டுக்குள் விடப்பட்டுள்ளது மற்றொரு விடயம். எல்லாம் 'சிவ'மயமே!

## அரசியலாளரின் பூடகமும் ஊடகமொன்றின் ஊகமும்!

தமிழ் தேசிய கூட்டமைப்பின் மூன்று எம். பிக்கள் இரு மாதங்களுக்கு முன்னர் கனடாவில் பொதுமக்கள் கூட்டமொன்றில் உரையாற்றினர்.

இங்குள்ள தமிழ் வானொலியொன்று மறுநாள் தனது செய்தியறிக்கையில், கூட்டமைப்பினரை அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்ரன் சந்தித்ததாகவும், சம்பந்தனின் திறமைத் தலைமையை அவர் சிலாகித்துக் கூறியதாகவும் தெரிவித்திருந்தது.

அதாவது, கூட்டமைப்பு எம். பி ஒருவர் இதனைப் பூடகமாக தமதுரையில் குறிப்பிட்டதாக மேலும் விளக்கியிருந்தது.

கூட்டமைப்பினரை ஹிலாரி சந்திக்கவில்லை. உரையில் 'பூடகமாக' குறிப்பிடப்பட்ட அந்தப் பெண்மணி வேறு யாரோ ஒரு அதிகாரியாம்.

அரசியல்வாதிகள் பூடகமாகப் பேசுவதில் வல்லவர்கள். அதற்காக, ஊடகம் ஊகித்துப் பிழைவிடலாமா?

## எல்லோருக்கும் ஆறு மாதம்; கணவருக்கு மட்டுமல்ல!

கலைஞர் கருணாநிதியின் மகள் கனிமொழி 'உள்ளே' போய் ஆறு மாதங்களாகிவிட்டன. 'இதோ வருகிறார்;
அதோ வருகிறார்" என்பது ஒருவாறு நிஜமாகி விட்டது.

தாய் (ராசாத்தி) மகளைப் பிரிந்து ஆறு மாதமாம்; அப்பா (கலைஞர்) மகளைப் பிரிந்து ஆறு மாதமாம். மகன் தாயைப் (கனிமொழி) பிரிந்து ஆறு மாதமாம்.

தமிழக ஊடகங்கள் இப்படித்தான் வரிவரியாக எழுதின. ஆனால் கனிமொழியை அவரது கணவர் பிரிந்து ஆறு மாதங்களாகி விட்டன என்று மறந்தும்கூட ஒருவரும் எழுதுதவில்லையென ஒரு சஞ்சிகை மிகவும் ஆதங்கப்பட்டு எழுதியுள்ளது. ஏன்?

குடும்ப வாழ்வில் இவர்களுக்குள் அவ்வளவு 'அந்நியோன்யம்' என்று உறவுகள் சொல்கிறார்கள்!

**உதாசனன்**
**உலா விருந்து**

## தமிழர் சந்தையொன்றின் வாராந்த விலைப் பட்டியல்

ஸ்காபரோவிலுள்ள பிரபல்யமான தமிழர் சந்தைகளில் இதுவும் ஒன்று. இங்கு பொருட்கள் மலிவு என்று அதன் விளம்பரங்களைப் பார்த்துச் செல்பவர்கள் ஏமாற்றமடைகின்றனர்.

பத்திரிகையொன்றில் அந்த வாரம் வெளிவந்த விலைப்பட்டியலுடன் சென்றவருக்கு பெரும் அதிர்ச்சி. சகல பொருட்களும், விளம்ப விலையைவிட இருபது சதத்துக்கு மேலால் அதிகம்.

"ஏன் இந்த விலைமாற்றம்?" என்று கேட்பவர்களுக்கு, சந்தை முதலாளி தெரிவிக்கும் பதில் இது:

"உவங்கள்... எங்கடை பேப்பர்காரரும், ரேடியோக்காரரும் ஒரு மாசதத்துக்கு முந்திக் கொடுத்த விளம்பரத்தையே இப்பவும் பாவிக்கிறாங்கள். இந்த வாரப் பட்டியலை புதிசாக அனுப்பினாலும் மாத்திறாங்களில்லை" என்று சொல்லி அழுகிறாராம்.

'ஆரைத்தான் நம்புவதோ இந்த ஏழை நெஞ்சம்'; ஏமாறுபவர் இருக்கும் வரை.....

## சவப்பெட்டிக்கு உத்தரவிடும் மகிந்தவின் அடிதடி மந்தி(ரி)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அமைச்சரவையில் பல்வேறு வகையான ஆட்கள் மந்திரிகளாக உள்ளனர்.

போதை வஸ்து வியாபாரிகள், பத்து வீத கமிஷன்காரர், நில மோசடிக்காரர், மத்திய கிழக்குக்கு பணிப் பெண்களை அனுப்புவோர், லஞ்ச மோசடிக்காரர் என்று இவர்கள் பல ரகம்.

அனைவரிலும் வித்தியாசமானவர் ஒருவர் இருக்கிறார். அவ்வப்போது பகிரங்கமாகவே மகிந்தவின் காலில் விழுந்து வணங்குவார். வீதியில் நின்று 'றைபிள்' எடுத்து பயமுறுத்துவார்.

எங்கோ ஒரு இடத்தில் பணம் கொடுத்து கலாநிதிப் பட்டமும் பெற்ற இவரது பெயர் மேர்வின் சில்வா. அரசுக்கு எதிராகச் செயற்படும் ஊடகவியலாளர்களை 'சவப்பெட்டி' தயாரிக்குமாறு இப்போ எச்சரித்துள்ளார்.

இந்த மந்தி(ரி), 'அலிபாபா கழுத்திலிருக்கும் பாம்பு' மாதிரியாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வே. விவேகானந்தன்

# மனித உரிமைகள் தினம் Write for Rights

## இந்த மாதம் பத்தாம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினம்.

1948ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் திகதி உலக மனித உரிமைகள் சாஸனம் பிரகடனம் செய்தப்பட்டதையடுத்து வருடாவருடம் இந்த நாள் சர்வதேச மனித உரிமைகள் தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. பல நாடுகளிலும் இயங்கும் மனித உரிமைகள் அமைப்புகளினாலும், மற்றும் அரசியல் சமூக அமைப்புகளினாலும் இது தொடர்பான கருத்தரங்குகள், கூட்டங்கள் என்பன நடத்தப்பட்டு வருகின்றது. இவ்வருடம் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஐம்பதாவதாண்டு நிறைவையொட்டி, விசேட நிகழ்ச்சிகள் ஏற்பாடாகியுள்ளன. இவற்றுள் Write for Rights நிகழ்ச்சி முக்கியமானது.

மனித உரிமைகள் எவ்வாறானவை? அவை ஏன் மதிக்கப்பட வேண்டும்? அவற்றின் முக்கியத்துவம் என்ன என்பவை தொடர் ஆய்வுக்குட்பட்டவையாக இருந்து வருகின்றன. நவீன சமூக, பொருளாதார அரசியல் சித்தாந்தங்கள் மற்றும் ஜனநாயக பாரம்பரியங்களின் வளர்ச்சி பெற்ற தன்மை என்பவற்றுக்கேற்ப, மனித உரிமைகள் தொடர்பான கருத்துகள் பரந்துபட்ட அளவில் விரிவாக விளக்கம் பெற்றுள்ளன.

மனித உரிமைகளின் ஆரம்ப காலக் கருத்துகள் மதக் கோட்பாடுகளின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இறைவன் முன்னால் அனைத்து உயிர்களும் சமம் என்ற கருத்தின் அடிப்படையில் அவற்றுக்கான உரிமைகளும் சுதந்திரங்களும் சமம் என விளக்கம் அளிக்கப்பட்டது.

ஆனால் 18ஆம் நூற்றாண்டில் காலத்துக்கேற்ப மாற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக பொருளாதாரத்தில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சி, அரசியல் துறையில் ஏற்பட்ட 1776ஆம் ஆண்டின் அமெரிக்க சுதந்திரப் பிரகடனம், 1789ஆம் ஆண்டின் பிரான்சியப் புரட்சி என்பவற்றையடுத்து சுதந்திரம். சமத்துவம், சகோதரத்துவம் என்ற கருத்துகளை மையமாக வைத்து மனித உரிமைகள் பார்க்கப்பட்டன.

இருபதாம் நூற்றாண்டில் மனித உரிமைகள் பற்றிய கருத்துகள் மேலும் கூர்மையடைந்தன. குறிப்பாக, முதலாம் உலகப்போர் (1914-1918), இரண்டாம் உலகப் போர் (1939-1945) என்பவற்றையடுத்து பல நாடுகள் போர்கள் தவிர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தையும், மனித உரிமைகள் பேணப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துவதில் ஒன்றுபட்டு நிற்கின்றன. இத்தகைய சூழ்நிலையில், உலகின் பல நாடுகளை அங்கத்தவர்களாகக் கொண்ட ஐக்கிய நாடுகள் சபையினால் மனித உரிமைகள் ஆணையம் 1946ல் உருவாக்கப்பட்டது. இதுவே 1948 டிசம்பர் 10ஆம் திகதி மனித உரிமைகள் சாஸனத்தைப் பிரகடனம் செய்தது.

மனித உரிமைகளின் முக்கியத்துவம் கருதி வளர்ச்சியடைந்த நாடுகள் முதல் வளர்முக நாடுகள் வரை பல நாடுகள் மனித உரிமைகள் தொடர்பான விதிகளைத் தங்களின் அரசியல் யாப்புடன் இணைத்துள்ளன. மேலும் காலத்துக்குக் காலம் பல புதிய உபவிதிகளையும் இணைத்து வருகின்றன. குறிப்பாகக் கனடிய அரசியல் யாப்பில் 1960, 1977, 1982ஆம் ஆண்டுகளில் அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான பல புதிய அம்சங்கள் அடக்கப்பட்டன. இனம், நிறம், தேசியம், வயது, பால், குடியியல் நிலைமை குடும்ப நிலை மற்றும் அங்கவீனம் போன்ற காரணங்களுக்காக பாகுபாடு காட்டுதல் சட்ட ரீதியாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

அதேசமயம், பல நாடுகள் மனித உரிமைகளைத் துச்சமாக மதிக்கும் நிலையும் காணப்படுகின்றது. 1960ஆம் ஆண்டு போர்த்துக்கல் நாட்டில் சுதந்திரத்துக்காகக் குரலெழுப்பிய இரு மாணவர்கள் கைது செய்யப்பட்டு ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனர். இதனையறிந்த பிரித்தானிய தொழிற்சங்க சட்டத்தரணி பீட்டர் பெனன்சோல், உலகளாவிய ரீதியில் மனித உரிமைகள் தொடர்பான பிரசாரத்தை மேற்கொண்டார். இதனை அமைப்பு ரீதியாகச் செயற்படுத்த 1961ஆம் ஆண்டு யூலை மாதம் சர்வதேச மன்னிப்புச் சபையை ஆரம்பித்தார். இன்று 150க்கும் அதிகமான நாடுகளில் மூன்று மில்லியன் உறுப்பினர்களைக் கொண்ட பாரிய நிறுவனமாக இது வளர்ச்சிகண்டு, இந்த வருடம் ஐம்பதாவதாண்டு நிறைவைக் கொண்டாடுகின்றது.

உலக நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை மிக உன்னிப்பாகக் கவனித்து. அதற்கு எதிரான துரித நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. சர்வதேச மன்னிப்புச் சபை. மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்தவோ, தடுத்து நிறுத்தவோ இதற்குச் சக்தி இல்லாவிடினும், இடம்பெற்று வருகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான தகவல்களைச் சேகரித்தும் பகிரங்கப்படுத்தியும் வருவதன் மூலம் அவைகளை உலகுக்குத் தெரியப்படுத்தி வந்தன. இந்த விபரங்களைச் சாதாரண மக்களும் அறியும் வகையில் Candle (மெழுகுதிரி) என்ற பிரசுரத்தையும் வெளியிட்டு வருகின்றது.

நீண்ட காலமாக இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான தகவல்களை சபை வெளியிட்டு வருகின்றது. இதன் மகத்தான பணிக்கு கனடியத் தமிழர்களும் நிதி சேகரித்து வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. 1986ஆம் ஆண்டில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட முன்னணி நாடுகளை 'கறுப்புப் பட்டியல்' தொகுப்பாக கனடிய அரசாங்கம் தயாரித்திருந்தது. இதில் இலங்கை உட்பட பதினெட்டு நாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. 1989ஆம் ஆண்டு இப்பட்டியல் திருத்தியமைக்கப்பட்டபோது, இலங்கை உட்பட எட்டு நாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களின் உச்சக்கட்டமாக 2009 மே மாதம் அமைந்துள்ளது.

இந்தக் காலத்தில் இரசாயனக் குண்டுகள், நச்சுவாயுக் குண்டுகள் மற்றும் கொத்தணிக் குண்டுகள் மூலம் பொதுமக்களை வகைதொகையின்றிக் கொலை செய்த இலங்கை அரசாங்கம் தற்போது சர்வதேச போர்க்குற்ற விசாரணையை எதிர்நோக்கும் காலத்திலுள்ளது. கனடா, பிரிட்டன் உட்பட பல மேற்குலக நாடுகள் இதனை வலியுறுத்தி வருகின்றன.

உலகில் அராஜக ஆட்சியாளர்களுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவளிக்கும் அரசுகள் இருக்கும்வரை மனித உரிமை மீறல்கள் தொடர்ந்துகொண்டே இருக்கும். ஐக்கிய நாடுகள் சபைக்கு மிடுக்கோடு உரையாற்றச் செல்லும் அராஜக நாடுகளின் தலைவர்கள், அதனால் வரையப்பட்ட மனித உரிமைகள் சாசனத்தையும் படிக்க வேண்டும். மனித உரிமைகள் மீறல்கள் என்பது அநாகரிக சமுதாயத்தின் அடையாளம் என்பதை இவர்கள் உணருவதில்லை. அதுவரை மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச மன்னிப்புச் சபை ஆகியவைகளின் பணிகள் தொடரவேண்டியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரா. சம்பந்தன்

# கல்லாமையும் இல்லாமையும்!

கோபமாக வந்தாள் வாசுகி! அவள்தான் வள்ளுவரின் மனைவி! நீங்கள் குறள் எழுதிய இலட்சணம் போதும். ஏட்டையும் எழுத்தாணியையும் எறிந்துவிட்டு வேறு வேலை பாருங்கள் என்றாள் ஆத்திரத்தோடு!

ஏன்? ஏன்? என்று திகைத்தார் திருவள்ளுவர்.

ஏன் என்றா கேட்கிறீர்கள்? என்னுடைய கணவர் தங்கமானவர்! அறிவாளி! முற்போக்கு சிந்தனை மிகுந்தவர்! யார் மனத்தையும் நோகடிக்காதவர்! என்றுதான் இவ்வளவு காலமும் எண்ணியிருந்தேன் நீங்கள் கல்லாமை என்ற அதிகாரம் பாடும் மட்டும்! கல்லாதான் சொல் காமுறுதல் முலை இரண்டும் இல்லாத பெண் காமுற்றது போலவா தெரிகிறது உங்களுக்கு? உங்களுக்கு வேறு உவமை கிடைக்கவில்லையா? அங்கவீனமான பெண்ணை அவமானப்படுத்தவா திருக்குறள் எழுதுகிறீர்கள்? இரைந்தாள் வாசுகி.

நீ இந்தக் குறளுக்கு என்ன பொருள் காண்கிறாய்? அதைச் சொல்! அமைதியாகக் கேட்டார் வள்ளுவர்.

பொருளா? என்ன பொருளென்றா கேட்கிறீர்கள்? காம சுகத்துக்கு அடிப்படையான மார்பகம் இரண்டும் இல்லாத பெண் ஒருத்தி அதை மறந்து கூடல் சுகத்தை விரும்பினால் உலகம் எவ்வாறு அவளை இகழ்ந்து சிரிக்குமோ அது போல கல்லாதவனும் தன் அறிவின்மையை மறந்து சபையிலே ஒன்றைச் சொல்ல விரும்பும் போது உலகம் அவனை இகழ்ந்து சிரிக்கும் அப்படித்தான் பொருள்பட எழுதி இருக்கிறீர்கள்.

படிக்காத குறை வேறு! அங்கவீனக் குறை வேறு! படிக்காத குறை ஒருவன் தானாகத் தேடிக்கொள்வது! அங்கவீனம் என்பது தானாகவே தேடிக்கொள்வது அல்ல. வந்து சேர்வது! இரண்டுக்கும் நீங்கள் முடிச்சுப் போடாதையுங்கோ. ஏற்கனவே தன்னுடைய அங்கவீனத்தால் அவமானப்பட்டு துடிக்கும் ஒரு பெண்ணை இவ்வளவு தூரம் இழிவு படுத்த திருக்குறளைத் தவிர வேறு ஒன்றாலும் முடியாது பாருங்கோ!

வள்ளுவர் சிரித்தார்! வாசுகி! நான் கேட்கும் கேள்விகளுக்கு முதலில் பதில் சொல். மார்பகம் இல்லாத பெண் கூடலை விரும்பி ஒருவனைக் கைப்பிடித்து இணைந்தால் என்ன நடக்கும்?

கருத்தரிப்பாள்! என்றாள் வாசுகி.
நல்லது! கருத்தரித்தால் குழந்தை பிறக்குமல்லவா?
ஆம்! அதில் என்ன சந்தேகம்?
பிறந்த குழந்தைக்கு பாலூட்ட என்ன செய்வாள் அந்தத் தாய்?

திகைத்தாள் வாசுகி.

என்ன சொல்வது என்று அவளுக்கத் தெரியவில்லை. குறளின் போக்கே மாறிவிட்டது. அவள் கண்ட பொருள் பிழையாகி விட்டது. தவறான முயற்சி ஒன்றின் விளைவு காட்டி அறிவுறுத்தும் உன்னதமான குறளைக் காமக் கண்ணால் பார்த்து விட்டதற்காக வெட்கப்பட்டாள் அவள்.

வள்ளுவர் சொன்னார்.

பாலூட்ட ஏதுவான மார்பகங்கள் இரண்டும் இல்லாத பெண் காமுற்று அதன் விளைவாக குழந்தை ஒன்றைப் பெற்று வைத்துக் கொண்டு அதன் முகம் பார்த்து தன் இயலாமையை நினைத்து எவ்வளவு துன்பப்படுவாளோ அதுபோல கல்வியறிவு இல்லாத ஒருவனும் ஆர்வ மேலீட்டால் மேடை ஏறி நின்றுகொண்டு சபையோர் முகம் பார்த்து கொடுப்பதற்கு ஏதுமில்லாமல் தன் கல்லாமையை நினைத்து துன்பப்படுவான் அம்மா! இந்த இருவர் மீதும் எனக்குப் பரிதாபம் இருந்ததனால் இப்படிக் குறள் எழுதினேன்! நீ நினைப்பது போல அபத்தமான கருத்தில் அதை நான் எழுதவில்லை!

பதறினாள் வாசுகி!

இருந்து பாருங்கோ! பிற்காலத்தில் வரப்போகும் பல்கலைக் கழகங்கள் பண்டிதர்கள் முதற்கொண்டு எல்லா உரையாசிரியர்களுமே என்னைப்போல அபத்தமான உரை தான் காணப்போகிறார்கள்! நீங்கள் நினைக்கும் உரை காண மாட்டார்கள் என்றாள் வாசுகி.

ஆம்! அவள் நினைத்தது போலவே தான் நடந்தது! குறளுக்கு தலைசிறந்த உரை வகுத்த பரிமேலழகர் கூட முலை இரண்டும் இல்லாத பெண் உடல் சுகத்தை விரும்பினால் உலகம் சிரிக்கும் என்ற பொருள் படத்தான் இக்குறளுக்கு உரை எழுதினார் அவரின் உரை தவறானதும் நாகரிகம் அற்றதும் வள்ளுவர் இயல்புக்கு மாறானதும் ஆகும்.

கல்லாதான் சொல் காமுறுதல் முலை இரண்டும்
இல்லாதாள் பெண் காமுற்று அற்று

(திருக்குறள் - கல்லாமை) ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குயின்ரஸ் துரைசிங்கம்

# திருந்துவரா நம்மவர்?

## அடுத்தவர் பற்றியே பேச்சு

தமிழர்கள் நான்கு பேர் கூடினால், ஏனைய சில தமிழர்கள் பற்றிப் பேசுவதே பிரதான கருத்துப் பரிமாற்றமாக அமைந்து விடுகிறது. ஏனைய சில தமிழர்கள் என்று கூறும்போது, அது அவரவர் குடும்ப உறவினராக, நண்பர்களாக, பழகும் ஏனைய சில குடும்பங்களாக இருக்கலாம். ஆனால், அவர்கள் அந்த இடத்தில் இல்லாதபோது, அவர்களைப் பற்றியே உரையாடல்களை முன்னெடுப்பதும், அவர்களிடமுள்ள குறைகளைப் பற்றி அளவளாவி ஏளனம் செய்து மகிழ்ச்சிப் பட்டுக் கொள்வதும், எம்மிடையே சற்று அதிகமாகவே இருக்கிறது. குறைகளை உரியவரிடமே சொல்வதுதான் கௌரவமானது. ஆனால் பல வேளைகளில், ஒருவரைப் பற்றி அடுத்தவரிடம் கூறி மகிழ்ச்சி கொள்வது எமது சமூகத்தில் பழகிப்போன 'சின்னத்திரை' தொற்று வியாதி.

இதிலே ஒரு படி மேலே சென்று, எம் சொந்தக் குடும்பத்திலுள்ள உறவுகளைப் பற்றியே அடுத்தவரிடம் பேசுவது, அனாவசியமான மனத்தாங்கல்களை உருவாக்குவது-டன், இப்படி குடும்ப அங்கத்தவர்கள் அல்லது அவர்களது குடும்பத்தவர் பற்றி வாய்க்கு வந்தபடி கதைப்பதும், வாழும் இறக்கையும் வைத்து இல்லாததையும் பொல்லாததையும் கதைப்பதும், அந்தப் பொழுதில் உவகையும் சுவையும் தருவதாக அமைந்தாலும், பின்னர் அவை, அந்தக் குடும்பங்களில் நிரந்தர வடுக்களை உருவாக்கி, குடும்பம் என்ற பெரிய வட்டத்தின் உறவுமீது படிப்படியாக விரிசல்களை உருவாக்கி விடுகின்றன.

எம் குடும்பத்திலுள்ள அங்கத்தவர்கள், அவர்களோடு இணைந்து கொண்ட துணை, அவர்களது ஏனைய குடும்ப உறுப்பினர்கள் என, அனைவரையும் அனுசரித்து நடக்கின்ற பக்குவம் எமக்கு அவசியம். அனுசரிக்க முடியாவிட்டாலும், அவர்களைப் பற்றி அடுத்தவரிடம் பொய் வதந்திகளைப் பரப்புவதையும், அவர்களது சிறிய சிறிய குறைகளைக் கூட, ஊதிப் பெரிதாக்கி குடும்ப உறவுகளில் காயங்களை உருவாக்குவதும், நிரந்தர விரிசலை ஏற்படுத்தி விடலாம். அதனால் இவை தவிர்க்கப்பட வேண்டும்.

தமிழர் என்றாலே, ஏனைய சில தமிழர்களைப் பற்றி ஏளனம் செய்து கொட்டமடிக்கும் அடிமட்டக் கூட்டம் என்ற பெயர் நிலைத்துவிடக் கூடாது. ஒரு தனி நபரோ, ஒரு குடும்பமோ, ஒரு குழுவோ அல்லது ஒரு அமைப்போ, தம்மால் இயன்ற பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுக்கும் போதும், இது போன்றே சரியாக ஆய்ந்தறிந்து உண்மையை மட்டும் மற்றவரிடம் பேசுவதும், ஊகத்தில் அல்லது சந்தேகத்தில் பலவற்றையும் எடுத்து வைத்துப் பேசுவதைத் தவிர்ப்பதும் மிக முக்கியமானது.

அண்மைக் காலத்தில், யாரைப் பற்றியும் எதுவும் பேசலாம், கேட்க யார் இருக்கிறார்கள் என்ற அளவிற்கு, கடந்த பல ஆண்டுகளாக தம் வாழ்வையே தியாகம் செய்து, மண்ணுக்கும் மொழிக்கும் வளமான எதிர்காலம் அமைய வேண்டுமென்ற ஒற்றை விருப்போடு தம்மைக் கொடுத்த உயர்ந்தவர்களைப் பற்றியும் அவர்களது அர்ப்பணிப்புக்கள் குறித்தும்கூட, வாய்க்கு வந்தபடி பேசித் திரிவோர் தொகை அதிகரித்து வருவது கவலை தருகிறது.

ஒரு பக்கம், தமிழினத்தைக் கூறுபோட முயலும் கூட்டம் திட்டமிட்டே வசை பாடுகின்ற அதேவேளை, இன்னும் பலரும் எதையுமே தீர விசாரித்து தங்கள் அனுமானங்கள் அத்தனையும் உண்மைதானா என்பதை உறுதி செய்யாமல் பொழுதுபோக்குக்காக சேர்ந்து கதைப்பதும், மீதியானோர், யார் எது சொன்னால் எனக்கென்ன, என் வீட்டில் சோறு விழுந்தால் போதாதா? என்ற கதையாக, 'சீரியல்' பார்த்துக் கொண்டு தங்களுக்கு எல்லா உண்மையும் தெரியும் என்பது போல் பாசாங்கு காட்டிக்கொண்டு, கனவுலகில் கார் ஓட்டித் திரிவது வேதனை தருகின்ற யதார்த்தம்.

யாரைப் பற்றியும் முடிந்தால் நாலு நல்ல வார்த்தை கூறுவது, குடும்பத்தினதும் சமூகத்தினதும் நிரந்தர நிம்மதியைப் பேண நிச்சயம் கைகொடுக்கும். சிலவேளை ஒருசில குடும்ப அங்கத்தவர்கள், தோற்றத்திலோ அல்லது குணத்திலோ, சில குறைபாடுகளைக் கொண்டிருக்கலாம்.

சில குழுமங்கள் தவறிழைக்கலாம், சில நல்லவர்கள் தவறான பக்கத்தில் நிற்பதுபோல் தோற்றம் தரலாம், ஆனால் அவற்றையெல்லாம் ஊதிப் பெரிதுபடுத்தி அடுத்தவரிடம் பேசித் திரிவதால், எமது சமூகத்தின் அல்லது எமது குடும்பத்தின் உறவுகளே பாதிப்படைகின்றன. அதைத் தவிர்த்து, குறைபாடு இருப்பதாகத் தெரிகின்ற நபரிடமோ குழுவிடமோ அந்தத் தவறை நாசூக்காகக் கூறி விடுவது, வள்ளுவன் வாக்கில் 'அவர் நாண நன்னயம் செய்ததாக' அமைவதுடன், அடுத்த நான்கு பேர், நம்மைப் பார்த்துச் சிரிப்பதையும் விவேகமுடன் தவிர்த்துக் கொள்ளலாமே! யாகாவராயினும் நாகாக்க!! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# ஆடம்பர விழாக்களும் ஊதாரிச் செலவுகளும்

"பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை, அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லாதியங்கு" என்பது வள்ளுவன் கூற்று. 'கொடிது கொடிது வறுமை கொடிது' என்றாள் ஔவை. உலகமே நடைபெறுவது பொருளாலேதான். பொருட் செல்வமும் கல்விச் செல்வமும் வாழ்வுக்கு இன்றியமையாதன. ஒரு நாடு வளமாய் இருந்தாற்றான் செவ்விதே இயங்கும்.

செல்வத்தின் அதிபதி திருமகள். கல்வியின் அதிபதி கலைமகள். செல்வமும் கல்வியும் இரு கண்களுக்கு ஒப்பானவை. பொருளைச் சம்பாதித்தால் மட்டும் போதாது. ஈட்டிய பொருளைச் சேமிப்பது பெருங்கடமை. கல்வியா செல்வமா என்று இன்றும் பட்டி மன்றங்கள் போடுகின்றனர். பணத்தைச் சம்பாதித்தால் மட்டும் போதாது. அதைப் புரக்கவும் வேண்டும். வருவாய்க்குத் தக்க செலவு செய்ய வேண்டும். பொருளை அழிப்பவர்க்கு வீட்டிலும் செல்வாக்கு இல்லை; சமூகத்திலும் மதிப்பு இல்லை. வருமுன் காப்பது முக்கியம்.

செல்வத்தைச் சேமிப்பது இலகுவான காரியமல்ல. ஈட்டிய பொருளை வெகு சாமர்த்தியத்தோடு சேமிப்பது முக்கியமாகும். ஆண்டாண்டு காலமாக நாம் சம்பாதித்த பொருளைக் கண நேரத்திலே அழித்து விடலாம். எத்தனையோ தனவந்தர்கள் இருந்த இடம் தெரியாமல் போனதற்குக் காரணம், அவர்களின் ஊதாரித்தனமே. இரண்டாவது மகாயுத்த காலத்தில் ஆங்கில அரசு, 'இடாம்பீக வாழ்வு கொண்டுவருந் தாழ்வு, சிக்கெனத் தேடின் சேருமே செல்வம்' என்ற வாசகங்களை எழுதி ஒட்டி மக்களைச் செந்நெறிப்படுத்தினர்.

நாம் கொஞ்சம் அசந்து போனால், 'இன்சால்வென்ட்' ஆக நேரிடும். இதற்குப் பல உதாரணங்களைக் கூறலாம். வெளிநாடுகளில் இருந்து பிள்ளைகள் ரொம்பச் சிரமப்பட்டு, தாய் தந்தைக்குப் பணம் அனுப்ப, அவர்கள் பொறுப்புணர்வின்றி பிறந்த நாள் கொண்டாட்டங்களுக்கும், ருது சாந்தி மற்றும் திருமண வைபவங்களுக்காகவும் செலவு செய்கின்றனர். தான் தேடாப் பொருளுக்கு மாற்றுமில்லை உரையுமில்லை என்பர். எனவே வருமுன் காக்கப் பழக வேண்டும். வந்தபின் காப்பது துர்லபம்.

கொடிது கொடிது வறுமை கொடிது; அதனிலும் கொடுமை இளமையில் வறுமை என ஔவைப் பாட்டி பாடினார். இன்னா இளமை வறுமை வந்து எய்தியக் கால் எனப்பாடியவளும் தமிழ் மூதாட்டிதான். எனவே நாம் செட்டாகச் செலவு பண்ணி, எம் மூலதனங்களை அழியாமற் பேணுவோமாக! நம் மூதாதையர் சேமித்து வைத்துப்போன காணி, வயல் தோட்டங்களைப் பேணுதல் நம் தலையாய கடமை. இந்த முதுசொம்தான் எம் செல்வம்; எம் சொத்து. இதையும் தமிழன்னை பின்வருமாறு எழுதி வைத்துள்ளாள்:

ஆனமுதலின் அதிகஞ் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை
எல்லார்க்கும் கள்வனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு (நல்வழி 26)

வருவாய்க்கேற்ற செலவு செய்ய வேண்டும். வரவுக் கோடு குறைந்து, செலவுக்கோடு விரியக் கூடாது. இதன் பொருள் 'வருவாய்க்கேற்ற செலவு செய்' என்பதாம்.

ஒருவன் தான் சம்பாதித்த முதற்பொருளை விட, மிகுதியாகச் செலவு செய்தான். ஆனால், மானங்கெட்டு, அறிவை இழந்து, தான் போன இடங்களிலெல்லாம், எல்லோராலும் திருடனாகக் கருதப்பட்டு, எழுவகைப் பிறவிகளிலும் கெட்டவனாகி, தன்னிடம் அன்பு கொண்ட மனைவிக்கும் பொல்லாதவன் ஆவான். இதனை நன்றாக அறிவாயாக! (நல்லார் - பெண்டிர்).

செல்வத்துக்கு அதிபதி திருமகள். திரு சேர்ந்தார்க்குச் சேராதன உளவோ என்பது கம்பன் வாக்கு. பணமும் குணமும் ஒரு இடத்தில் நிற்காது என்பர். செல்வம் வாழ்வியலின் மூலவளம். பெருளுடைமை, செல்வமுடைமை, எனப் பேசப்படும். செல்வம் எல்லாமே உடைமைதான் என வள்ளுவம் கூறும். பணம் உள்ளவரைத்தான் எல்லோரும் போற்றுவர். பணம் இல்லாதவனைப் பெற்றெடுத்த தாயும் விரும்பாள். கட்டிய மனைவியும் ஏனோ தானோ என்பாள். ஏழையின் சொல்லை எவருமே மதியார். அவன் சொல்லு அரங்கேறாது என்கிறாள் ஔவை.

இல்லறமாம் நல்லறத்தைப் பேணுபவள் மனைவி. அவளுக்கு நிறையப் பொறுப்புகள் உண்டு. வீட்டுத் தலைவனின் வருமானத்துக்கு இசைவாக மனைவி நடப்பது முக்கியமாம். எனவே, மனைக்குத் தக்க பண்புகளோடு தலைவனின் வருமானத்துக்கு ஏற்ப, செலவு செய்ய வேண்டியது மனைவியின் பெரும் பொறுப்பாம். அதை வள்ளுவன்,
மனைத்தக்க மாண்புடையள் ஆகிற்தன் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத்துளை (குறள்: 51) என்கிறார்.
எனவே பெண்ணின் ஊதாரித்தனம் குடும்ப வாழ்வைப் பெரிதும் பாதிக்குமன்றோ!

அவ்வண்ணமே வருமானம் குறைவாய் இருந்தாலும் பாதகமில்லை. வருவாயின் பாதை சின்னன் ஆனாலும் காரியமில்லை. செலவை வருமானத்துக்கு இசைவாய்ச் செய்ய வேண்டியது ஒவ்வொரு குடும்பப் பெண்ணினதும் பாரிய பொறுப்பு.

ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலக் கடை (குறள் - 478)

இதன் நுண்பொருள் என்ன? பணம் வருகிற வழி சிறிதாய் இருந்தாலும் பாதகமில்லை. செலவுப் பாதை விசாலமாய் இருந்தால் போதும். ஆக, வருவாயிலும் செலவு கூடக்கூடாது.

இவ்வண்ணமே செல்வம் சேர்வதும் மாறுவதும். மனித வாழ்வை ஒரு நாள் சந்தை என்று பாபா கூறுவார். நாடகக் களரியிலே பார்வையாளர் சில பாதையால் புகுந்து, நாடகம் முடியும் வேளை எவருக்கும் சொல்லாமற் கொள்ளாமல் போவதைப் போலவே செல்வ நிலையாமையும்.
கூத்தாட்டு அவைக் குழாத்தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுஇழிந் தற்று. (குறள் - 332)

ஆக, இதுவுரை நாம் பூடகமாகச் சொன்ன கருத்தைத் தாண்டி வெளிநாடு வந்தோர் பொருளாதாரத் தாக்கத்தினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். ஆடம்பரமான விழாக்களும், ஊதாரித்தனமான செலவுகளுமே இதற்குக் காரணம்.


பிறந்தநாள் கொண்டாட்டங்கள், பூப்புனித நீராட்டு வைபவங்கள், நினைவு நாள் மற்றும் அரங்கேற்ற வைபவங்களிற்கு இறைக்கும் பணம், ஆடம்பர உடை, 'இலக்சறி' வாகனம், படாடோபமான வாழ்க்கை, ஏட்டிப் போட்டிக்கு வீடு வாங்குதல் போன்றவைகளை உதாரணமாகக் கொள்ளலாம். நம்மை நாமே மாற்றியமைத்து ஆரோக்கியமான வாழ்வை முன்னெடுப்போமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஓம்னி' பல்கலாசார தொலைக்காட்சிச் சேவை ஆலோசனைச் சபை உறுப்பினர்களுக்கு மதிப்பளிப்பு





றோஜர்ஸ் நிறுவனத்தின் 'ஓம்னி' பல்கலாசார தொலைக்காட்சிச் சேவையின் ஆலோசனைச் சபை உறுப்பினர்களுக்கு மதிப்பளித்து சிறப்புச் செய்யும் வைபவம் அண்மையில் அதன் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. ஆலோசனைச் சபை உறுப்பினர்களான டொமினிக் மென்டெஸ், ஹானி ஹசன், நளினி ஸ்டுவர்ட், திரு எஸ். திருச்செல்வம், அனா சியாப்பா, பால் டி லுலியோ, ஐரின் சூ ஆகியோருடன் 'ஓம்னி' நிறுவன தலைமை அதிகாரிகளான மடெலின் சினியாக், ரொனி வைனர், லெஸ்லி சோல் ஆகியோர் ஒளிப்படங்களில் காணப்படுகின்றனர். (Photos: Hughes Cormier)

# மாவீரர் வார தொடக்க நிகழ்வு - ரொறன்ரோ நவம்பர் 25, 2011











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரேயொரு நிகழ்வு - ஒரே இடத்தில் 16

# ரொறன்ரோ மாவீரர் வணக்க தமிழர் தேசி






























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16 மணித்தியாலங்கள் நான்கு அமர்வு

# ...சிய நினைவெழுச்சி நாள் - நவம்பர் 27



ஒளிப்படங்கள்: கோகுலன்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## நவம்பர் 20, ஞாயிற்றுக்கிழமை

# றொறன்ரோவில் மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு 2011











Get more from your home by paying less each month

Ragavan (Raga) Ramanathan AMP
Mortgage Development Manager
Platinum Performer

Scotiabank

You're richer than you think.®

Tel: 416.579.7533
Fax: 416.352.1464
Email: ragavan.ramanathan@scotiabank.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்

# என்றுமுள்ள செந்தமிழ் 51

அந்தணர்க்கு அகரம் ஆயிரம் கட்டுவதாலும் கோயில்கள் ஆயிரம் அமைப்பதாலும் பலன் இல்லை!

திருமூலர் ஏனைய சித்தர்களைவிட தலைசிறந்த சித்தர். காலத்தால் முந்தியவர். மூவாயிரம் பாடல்களைப் பாடியிருக்கிறார். திருமூலர் மனித நேயத்தையும் சிற்றுயிர்கள் இடத்தும் கருணை காட்டவேண்டும் என்பதையும் வற்புறுத்துகின்றார்.

இறைவன் உலகத்தையும், நுகர் பொருள்களையும் உயிர்கள் பெற்று இன்புறுவதற்கே படைத்தளித்தான். உயிர்களிடமிருந்து இறைவன் அன்பு ஒன்றைத் தவிர வேறு யாது ஒன்றும் பெற விரும்புவதில்லை. ஆனால் சமயவாதிகள், சடங்கு நெறியில் பற்றுக் கொண்டு நின்று, மனிதனின் பசிக்கு உணவிட விரும்பாது இறைவனுக்குப் படையலிட்டு மகிழ்கின்றனர்.

இறைவன் மனிதன் அளிக்கும் உணவையும், படையலையும் உண்டு மகிழ்கின்றானா என்றால் இல்லை. இறைவன் கவனத்திலும் கணக்கிலும் அவனுக்குப் படைக்கப்படும் படையல் இடம் பெறுவது இல்லை. அவன் கணக்கில் இடம்பெற விரும்பினால் பசித்திருப்போருக்கு உணவு அளியுங்கள். அதுவே அவனைச் சென்றடையும் அரிய பெருநெறி என்கிறார் திருமூலர்.

படமாடக் கோயில் பகவற்கு
ஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு
அங்குஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு
ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு
அதுஆமே
(திருமந்திரம் - 1857)

உலகில் இரு கோயில்கள் உண்டென்கிறார் திருமூலர். அவை, (1) படமாடுகின்ற கோயில் (2) நடமாடும் கோயில். நடமாடும் கோயிலாவது உயிர்கள். குறிப்பாக மனிதர்கள். கடவுளைப் படமாக எழுதி வைத்து வழிபட்டமையால் படமாடக் கோயில் என்றார். ஆண்டவனுக்கு ஈவதை அடியார்க்கு ஈந்தால் அஃது ஆண்டவனைச் சேரும். நடமாடும் கோயிலாகவுள்ள அடியார்க்குச் செய்யும் பூசை படமாடக் கோயில் இறைவனுக்குச் செய்யும் பூசையாகும்.

தன்னையொத்த மனிதன் பசித்திருக்கையில் கடவுட்கு ஒரு பொருளைக் காணிக்கையாக அளித்தால் அது நடமாடும் கோயிலான அடியவர்களுக்குச் (வறியவர்களுக்கு) சென்று சேராது. ஆனால் நடமாடக் கோயிலான பசித்த மனிதனுக்கு ஒன்று ஈந்தால் அது இறைவனை நேரடியாகச் சென்று சேரும் என்கிறார் திருமூலர்.

இன்று கோயிலில் இருக்கும் இறைவனுக்கு ஆடம்பரமாகச் செலவு செய்து வழிபாடு செய்தலே பெரு வழக்காக இருக்கிறது. அடியவர்களுக்குக் (வறியவர்களுக்கு) கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் பலரிடம் இல்லை.

திருமந்திரம் போன்ற சித்தர் இலக்கியங்கள் மக்கள் சமுதாயம் நலன் பெற வேண்டுமென்ற நோக்கில் தான் படைக்கப்பட்டவை. தொன்றுதொட்டு இக்காலம் வரை அங்ஙனமே இலக்கியங்கள் உருவாகின்றன. திருமந்திரம் இந்தப் பொதுவிதிக்கு விலக்கு அல்ல.

திருமூலர் அவருக்குப் பின்னர் வந்த சித்தர்களைப் போல புரட்சிகரமான கருத்துக்களை தாம் பாடிய பாடல்கள் மூலம் வெளிக்கொண்டு வந்திருக்கிறார்.

காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பல்லவ மன்னர்கள் காலத்திலும் அதன் பின்னர் இடைக்காலச் சோழர்கள் காலத்திலும் சைவம் சமணத்தையும் பவுத்தத்தையும் தோற்கடித்து எழுச்சி பெற்றது.

சமண மதத்தவனான பல்லவ அரசன் முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி. 600 முதல் 630 வரை) சைவ நாயன்மார்களில் ஒருவரான திருநாவுக்கரசரால் தன் நோய் தீர்க்கப்பெற்று சைவ சமயத்துக்கு மாறினான் என அறிகிறோம்.

பாண்டிநாட்டை ஆண்ட கூன்பாண்டியன் என்ற நின்றசீர் நெடுமாறன் சமண சமயத்தைச் சார்ந்திருந்ததால் பாண்டிய நாட்டில் சைவ சமயம் குன்றி இருந்தது. சம்பந்தர் சமணர்களோடு அனல்வாதமும் புனல் வாதமும் செய்து வெற்றி பெற்றார். திருஞானசம்பந்தரின் அருளினால் நெடுமாறனை மெல்லப் பற்றிய வெப்பு நோய் குணமாகியது. இதனால் நெடுமாறன் சமண சமயத்தை நீக்கி சைவத்தில் சேர்ந்தான் என்கிறார்கள்.

பல்லவ, சோழ மன்னர்கள் காசி, வங்காளம் (முதலாம் இராசேந்திரன்) போன்ற தேசங்களில் இருந்து பிராமணர்களைக் கூட்டம் கூட்டமாகக் கொண்டு வந்து எண்ணாயிரம், திருபுவனம், ஆயகுடி, முக்கூடல் போன்ற ஊர்களில் அவர்களுக்கு இறையிலி மான்யங்கள், அக்கிரகாரங்கள், சதுர்வேதி மங்கலங்கள் என்ற புதிய குடியிருப்புகளில் குடியேற்றினார்கள். பிராமணர்கள் வேதம் படிக்க வேத பாடசாலைகளை நிறுவி அவற்றுக்கு நிவந்தம் எழுதி வைத்தார்கள்.

தமிழ் படிக்க யாரும் பள்ளிக்கூடங்கள் கட்டியதாக செய்தி எதுவும் இல்லை. வீட்டுத் திண்ணைதான் தமிழர்களது பள்ளிக்கூடங்களாக இருந்தது. அங்கு நிகண்டு, பாரதம், இராமாயணம், கூட்டல், கழித்தல் ஆசிரியரால் சொல்லிக் கொடுக்கப்பட்டது. வசதி படைத்தோரே இலக்கியம், இலக்கணம் படித்தார்கள்.

திருநாள் பெருநாட்களிலும் வெற்றி விழாக்களிலும் வெளியூர் செல்லும் போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவேந்தரும் பிராமணர்க்குத் துலைநிறை (துலாபாரம்) பொன் (இரணிய கருப்பம்) ஆவாயிரம் (கோசகஸ்ரம்) முதலிய தானங்களைச் செய்து வந்தனர்.
(தேவநேயப்பாவாணர் எழுதிய தமிழர் மதம் - பக்கம் 93)

முதலாம் இராச இராசனின் இராசகுரு ஈசானக் குருதேவர், விக்கிரம சோழனுக்கு சுவாமி தேவர், மூன்றாம் குலோத்துங்கனுக்கு சிவாச்சாரியார். முதலாம் இராசேந்திரனின் இராசகுரு சர்வசிவ பண்டிதர். இராசாதி இராசகுலதுங்கனுக்கு சோமேசுவரர் இராசகுருவாக இருந்தனர். தமிழ் மன்னர்கள் வானுயர்ந்த கோயில்களையும் கோபுரங்களையும் பெருத்த பொருட்செலவில் கட்டினார்கள்.

ஆனால் திருமூலர் இவற்றால் பயன் இல்லை என்கிறார். பேர் கொண்ட பார்ப்பார் தங்குமிடம் அகரமாகும். பார்ப்பார் குடியிருப்புக்கள் ஆயிரம் அமைத்து அவற்றை அவர்களுக்குக் கொடுப்பதால் பயன் யாது? திருக்கோயில்கள் ஆயிரக் கணக்கில் கட்டி முடிப்பதால் பயன் யாது? யாவரும் புகழ்ந்தேத்தும் சிவஞானியாகிய அடியார் ஒருவருக்குப் பகற்பொழுது உண்ண உணவளித்தால் வரும் பயனுக்கு இவ்வறப் பயன்கள் சிறிதும் ஈடாகாது என்கிறார்.

அகரம் ஆயிரம் அந்தணர்க் கீயிலென்
சிகரம் ஆயிரஞ் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூண் பலதத்துக்கு
நிகரிலை என்பது நிச்சயந் தானே!

அருச்சனை அபிசேடம் செய்தால், தேர் செய்தால், தேர்த் திருவிழா செய்தால், தீர்த்தத் திருவிழா செய்தால் புண்ணியம் கிடைக்கும் அது மறு உலகுக்கு உதவும் என மக்கள் நினைக்கிறார்கள். மாறாக மக்களது பசிப்பிணி போக்கக் கொடுத்தால் அதனால் எந்தப் பயனும் இல்லை என நினைக்கிறார்கள்.


பட்டினி கிடந்து பசியால் மெலிந்து வாடும் வன்னி மக்களுக்கு ஒவ்வொரு நாளும் குறைந்தது ஒரு வேளை உணவு நல்கும் பொருளாதார வல்லமை புலம்பெயர் தமிழர்களிடம் இருக்கிறது. ஆனால் பெரும்பான்மையினர் அந்த மக்களைப் பற்றிச் சிறிதேனும் சிந்திப்பது இல்லை. கவலைப்படுவதும் இல்லை. (வளரும்)


---

## சில்லாலைச் சங்க பத்தாவது வருட வைபவம்

சில்லாலை சமூக கலாசார கனடாச் சங்கத்தின் பத்தாவது ஆண்டுக் கூட்டம், மலர் வெளியீடு, நத்தார் ஒன்றுகூடல் ஆகியவை ஒன்றிணைந்த விழா இந்த மாதம் பத்தாம் திகதி பிற்பகல் ஆறு மணிக்கு ஸ்காபரோ 700 கென்னடி வீதியிலுள்ள அங்கிலிக்கன் தேவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேலதிக விபரங்களுக்கு சங்கத் தலைவர் அ. யேசுதாசனுடன் 905 826 9445 இலத்தில் தொடர்பு கொள்ளவும்.

---



பா(f)ன்ஸி Fancy Florist பூக்கடை

ஒவ்வொரு வாரமும் தமிழ்நாட்டிலிருந்து இயற்கையான பூக்களை இறக்குமதி செய்கிறோம். திருமணங்களுக்கும் ஆலயங்களுக்கும் தேவையான விசேட பூக்களை உடனடியாகத் தருவித்து வழங்குகின்றோம்.

நறுமணம் கமழும் மல்லிகை, றோஸ், சம்பங்கை மருக்கொழுந்து மற்றும் வாடாமல்லிகை மாலைகளில் நாம் கைதேர்ந்தவர்கள்.

விசேட வழிபாடுகளுக்குரிய வில்வம் இலை, துளசி, அறுகம்புல், மாவிலை, வெற்றிலை, வாழையிலை ஆகியவை எம்மிடமுண்டு.






தொடர்புகளுக்கு வரதன்

1688, Victoria Park Ave., North York, ON

**416 288 1419**



இணையத்தளம்: www.fancyflorist.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம்

# அன்புப் பஞ்சம் அழிக்கும் பிஞ்சுகள்!

முப்பது கோடி மக்கள்
மொய்த்துவாழ் கனடாவாம்
இப்பெரிய நாட்டில்
இருக்கும்நான் ஓர்தனியன்!
அம்மா ஒருத்தி உளார்!
அப்பா ஒருத்தர்உளார்!
அம்மம்மா இருக்கின்றாள்!
அம்மப்பா இருக்கின்றார்.!
அண்ணன் இருக்கின்றான்!
ஆனாலும் தனியன்நான்!
உண்ணும்தீன், உடுக்கும்உடை,
உறங்குமெத்தை யாவுமுண்டு!
ஆயினும் தனியன்நான்!
அனலும்மனத் தனியன்நான்!
தாயினது பாசமெனில்
சற்றுங் கிடைப்பதில்லை!

விடிந்ததும் எழுப்பியெனை
மெத்தையை விட்டிறக்கி,
முடிந்தவரை விரைவாக
முகங்கழுவி, உணவூட்டி,
சீருடையை மாட்டிச்
சேர்ந்திடுவார் அண்ணனிடம்!
ஓரன்பு வார்த்தை
உரைக்கார் தமிழினிலே,
அரைகுறை ஆங்கிலத்தில்
ஆணை பிறப்பிப்பார்!
ஒருநிமிடம் ஓயாமல்
தொலைபேசி தோளேந்திச்
சோறு வடிக்கையிலும்
துணிமடித்து வைக்கையிலும்,
வேறெந்த வேலையுள்ளும்
விடாப்பிடியாய் நண்பியுடன்
மணிக்கணக்கில் தமிழில்
வளவளென்று பேசிடுவார்!
பணிப்பாரெனை Go, go, you
do the home work என்று!

அப்பாவோ அதில்மோசம்!
அந்தியிலே வேலைவிட்டு
எப்பொழுது வந்தாலும்
இருக்கின்ற புல்லுவெட்டும்
எந்திரத்தை, இல்லையேல்
ஏதுமொரு எந்திரத்தை
குந்தி யிருந்தபடி
குடைந்தெடுத்துக் கொண்டிருப்பார்!
வீட்டினில் வந்துவிழும்
விளம்பரக் கட்டுகளை,
நீட்டிக்கால் உட்கார்ந்து,
நிதானமாய் ஆராய்வார்,
மலிவுவிற்பன கடைகள்
வைக்கிறவோ என்றறிய!
பலசமயம் அதற்காகப்
பறந்திடுவார் கடைகளுக்கு!


அம்மாவோ அப்பாவோ
அன்புகாட்ட மாட்டாராம்!
அம்மம்மா என்றாலும்
அரவணைப்பா ரோறென்றால்
அந்தஅம் மம்மாவோ
அவர்களிலும் படுமோசம்!
எந்தநேரமும் அவரோ
இருந்துதொலைக் காட்சிமுன்னால்
ஒன்றுக்குப் பத்தாக
ஓடுந்தொடர் நாடகங்கள்
நன்றாய் ரசித்திடுவார்!
நாடகத்துப் பாத்திரங்கள்
அழுதால் அழுதிடுவார்!
சிரித்தால் சிரித்திடுவார்!
தொழுதால் தொழுதிடுவார்
தொலைந்தால்மட்டும் தொலையார்!
அப்பக்கம் நான்போனால்
அரைகுறை ஆங்கிலத்தில்
அப்பா அடிப்பார்! போ!
அடாஹோம்வேக் செய்யென்பார்!

அம்மம்மா வும்அன்பே
அற்றவளாய் இருக்கையிலே
அம்மப்பா என்றாலும்
அரவணைப்பா ரோஎன்று
அண்ணனோ நானோ
அணுகிடவும் வழியில்லை!
புண்ணியவான் தினமும்
பொழியும்பனிச் சறுக்கலிலும்
நடையாய் நடந்தே
நண்ணிடுவார் 'மோல்' என்னும்
கடைகள் களஞ்சியத்தை!
கணக்கின்றிக் கூடுகின்ற
தம்பருவக் கிழவருடன்
சல்லடித்து நாள்முழுதும்
வம்பளந்து நள்ளிரவில்
வருகின்றார் வீட்டுக்கு!

அன்புதன்மேல் பொழிவதற்கு
ஆரும்அற்ற ஏக்கத்தால்
என்அண்ணன் மனம்வெந்து
எய்தியுள்ளான் மனஅழுத்தம்!
மனஅழுத்தம் மிஞ்சியதால்
மனஊக்கம் வற்றியதால்
என்றுஅண்ணன் படிப்பினிலே
எய்துகிறான் பின்னடைவு!
அதனால்என் மீதுமவன்
அன்புசெய்ய முனைவதில்லை!
இதனாலே என்வாழ்வும்
எய்துகி்து பின்னடைவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario. MIK 5J8**
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow VillageBuilding)

**(416) 266 5161**

**Main Square Dental Office**

7-2575 Danforth Avenue
Toronto, Ontario. M4C 1L5

**Dr. Shan - Thursday (morning)**
**Dr. Yao San (Tue, Fri & Sat**
**Dr. Brian (monday)**
**Dr. May (wednesday)**

**(416) 690 0121**

Est. 1991

# Computek College

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

www.computek.edu

We provide assistance for Second Career funded Applicants. E.I receiving /received, Maternity benefits received, WSIB, Ontario Works clients & New Immigrants welcome



**SECOND CAREER**

**You maybe eligible upto $28,000 to pay for:**

Living Expenses
Transportation
ChildCare
Books
Tuition and other

**Diploma Programs**

- Early Childcare Asst (ECA)
- Personal Support Worker (PSW)
- Medical Office Admin (MOA)
- Computerized Accounting
- Business Administration
- Application Development
- Network Engineering
- Enterprise Network Engineering

| Markham Campus | Scarborough Campus | Toronto Campus |
|---|---|---|
| Markham / Steeles | Kennedy / Sheppard | Kennedy / Eglinton |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |

Not all the courses are available at all the locations



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

# உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்





- மரண அறிவித்தல்கள்
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM

**HEAVEN CARES**

ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY

www.maranam.com, E-Mail: info@maranam.com

Working With

Chapel Ridge

FUNERAL HOME INC.

PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS

8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: **Vilosan Sivatharman** B.Eng

Funeral Counsellor

**416-431-3600** Ext:1

Call: **Christeen Seevaratnam**

Funeral Counsellor

**416-431-3600** Ext:2







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ், சமய, நடன, மிருதங்க, இசை தொடர்பான புறோமாரின் சொந்தத் தயாரிப்புகள் யூன் 6ம் திகதிமுதல் விற்பனைக்கு வருவதால் அவற்றின் கொள்வனவாளர்கள் இந்த விளம்பரத்துடன்மேலதிக விலைக் கழிவையும் பெற்றுக்கொள்ளலாம்

உங்களுக்குத் தெரியும், நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..




2010முதல் அதிகமான பொருட்கள் எங்களின் சொந்த தயாரிப்பு என்பதால் இந்த பொருட்களோ, விலையோ வேறு **எங்கும்** கிடைக்காது.

*On high, with your thoughts*

**PROMAR**
**Awards & Promotions Ltd**

**www.promarawards.com 416-291 2344**

*585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5*



**AB LEGAL SERVICES**
Professional Corporation

**Kauvsegan.E**
Accident Benefit Specialist

204-80 Corporate Drive, Toronto, ON. M1H 3G5
**Tel: 416 290 6200 Fax: 416 290 6201**
email: info@ablegalspc.com
www.ablegalspc.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குடையின் கீழ்
சகல தேவைகளும்

எஸ்.பி. இம்போட்டர்ஸ்
S.P. Importers



Fresh Fish & Meat
2853 Lawrence Ave. East
Scarborough
416 261 4737

Furniture & Mattress
2859-2861 Lawrence Av. E.
Scarborough
416 266 3077

Grocery & Vegetables
2863 Lawrence Ave. East
Scarborough
416 261 3881

Video & Audio
2865 Lawrence Ave. East
Scarborough
416 261 3881



எஸ். கணேஷ்

# டெஸ்ட் போட்டியின் சில சிறப்புகள்

நடைபெற்று முடிந்த டெல்லி டெஸ்ட் போட்டியின் சில சுவாரஸ்யங்கள்

கடந்த 2008ல் இருந்து சொந்த மண்ணில் விளையாடி உள்ள 20 டெஸ்ட் போட்டிகளில் இந்தியா 11 வெற்றி, 2 தோல்வி, 7 வெற்றி தோல்வியில்லை.

கோட்லா மைதானத்தில் இந்தியா பெறும் 11வது வெற்றி இது. இங்கு இந்தியா 6 போட்டிகளில் தோற்றுள்ளது.

டெஸ்ட் போட்டிகளில் இந்தியா 4வது இன்னிங்சில் இலக்கை துரத்தி வெற்றி பெற்ற ஸ்கோர்களில் இது 3வது அதிகபட்ச ஸ்கோராகும் (276). கோட்லா மைதானத்தில் இது 2வது அதிகபட்ச வெற்றி இலக்காகும். ஏற்கனவே மேற்கிந்திய தீவுகள் அணி இங்கு 24 ஆண்டுகளுக்கு முன் நடந்த டெஸ்டில் இதே வெற்றி இலக்கை எட்டியுள்ளது.

முதல் இன்னிங்சில் பின்தங்கிய போட்டிகளில் இந்தியா பெறும் 18வது வெற்றி இது. இதில் 13 போட்டிகளை சொந்த மண்ணில் வென்றுள்ளது.

கடைசியாக மொகாலியில் 2010ம் ஆண்டு அவுஸ்திரேலியாவுடன் நடந்த பரபரப்பான போட்டியில் வெற்றி இலக்கான 216 ரன்னை கை வசம் ஒரு விக்கெட் மட்டுமே எஞ்சியிருந்த நிலையில் எட்டியது. அந்த போட்டியிலும் லக்ஷ்மண் ஆட்டமிழக்காமல் இருந்தது குறிப்பிடத்தக்கது.

அறிமுக போட்டியில் ஆட்டநாயகன் விருதை பெறும் 3வது இந்திய வீரர் என்ற பெருமை அஸ்வினுக்கு கிடைத்துள்ளது. முன்னதாக 2006ல் பைசலாபாத்தில் நடந்த போட்டியில் ஆர்.பி.சிங் இந்த பெருமையை பெற்றுள்ளார்.

நான்காவது இன்னிங்சில் அதிக ரன் குவித்த வீரர்களின் பட்டியலில் ராகுல் டிராவிட்டை பின்னுக்குத் தள்ளி சச்சின் முதலிடத்துக்கு முன்னேறி உள்ளார். கோட்லா மைதானத்தில் அதிக ரன் குவித்த வீரர்கள் பட்டியலிலும் வெங்சர்க்காரை முந்தி சச்சின் முதலிடம் பிடித்துள்ளார்.

கடந்த 2010ல் இருந்து லஷ்மண் விளையாடிய டெஸ்ட் போட்டிகளில் 4வது இன்னிங்சில் அவரது ஸ்கோர் விவரம் வருமாறு: 103*, 73*, 32*, 3*, 56, 4, 58, (*ஆட்டமிழக்கவில்லை).

டெண்டுல்கர் 100-வது சதம் அடிப்பாரா??

உலகின் தலைசிறந்த துடுப்பாட்டக்காரர்களில் ஒருவர் சச்சின் டெண்டுல்கர். சர்வதேச போட்டிகளில் 100-வது சதத்துக்காக காத்திருக்கிறார்.

அவர் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் சேர்த்து 99 சதம் (டெஸ்ட் 51, ஒருநாள் போட்டி 48) அடித்துள்ளார்.

உலக கிண்ண போட்டியில் தென்ஆபிரிக்காவுக்கு எதிராக கடந்த மார்ச் 12-ந்தேதி அவர் சதம் அடித்தார். அதற்கு பிறகு டெண்டுல்கர் சதம் அடிக்கவில்லை. உலக கோப்பையிலேயே தனது 100-வது சதத்தை அடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது ஆனால் தவறவிட்டார்.

பாகிஸ்தானுக்கு எதிரான அரை இறுதியில் 85 ரன் எடுத்து ஆட்டம் இழந்தார். அதை தொடர்ந்து இந்திய அணி மேற்கிந்திய தீவுக்கு பயணம் சென்றபோது அவர் விளையாடவில்லை. இங்கிலாந்துக்கு எதிரான 4 டெஸ்ட் தொடரிலும் 100-வது சதம் வாய்ப்பை தவறவிட்டார்.

ஓவலில் நடந்த 4-வது டெஸ்டில் 91 ரன்னில் ஆட்டம் இழந்தார். ஆனால் ஒருநாள் தொடரிலும், அதைத் தொடர்ந்து இந்தியாவில் நடந்த ஒருநாள் தொடரிலும் தெண்டுல்கர் காயம் காரணமாக விளையாடவில்லை. அணிக்கு திரும்பி இருக்கும் தெண்டுல்கர் தற்போது நடைபெற இருக்கும் வெஸ்ட் இண்டீஸ் தொடரிலாவது 100-வது சதத்தை அடிப்பாரா என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R & S
AUTO SALES
Top Quality Used Car Dealer

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

35 வருட அனுபவம்



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha

R & S Auto Sales Inc.
Radha Motor Inc.
3030 Markham Road
Scarborough, ON
416-412-3838
416-836-5825

# தண்டம் செலுத்தாத வாகனங்களை தடுக்க ஆலோசனை

போக்குவரத்து விதிகளை மீறியமைக்கான தண்டப் பணத்தைச் செலுத்தாதவர்களின் வாகனங்களுக்கு வருடாந்த 'லைசன்ஸ் பிளேட்' புதுப்பிக்கப்படக்கூடாது என்பதுடன், அவர்களின் வாகனங்களைத் தடுத்து வைக்கவும் சட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென ஒன்ராறியோ பொலிஸ் சேவைச் சபைகளின் கூட்டமைப்பு ஒன்ராறியோ அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. ஒன்ராறியோவில் சுமார் இரண்டரை பில்லியன் டாலர்கள் தண்டப் பணம் நிலுவையிலுள்ளதாகவும், வருடாவருடம் இத்தொகை அதிகரித்துச் செல்வதாகவும் இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நிதித் தட்டுப்பாட்டினால் நெருக்கடியிலிருக்கும் ஒன்ராறியோவின் நகர-சபைகள் இந்தப் பணத்தைச் சேகரிக்க முடிந்தால் அவற்றை உள்ளூர் செலவுகளுக்கு, முக்கியமாக போக்குவரத்துப் பணிகளுக்குப் பயன்படுத்த முடியுமென கூட்டமைப்பின் தலைவர் அலோக் முகர்ஜி தெரிவித்துள்ளார். தண்டப் பணத்தைச் சேகரிப்பது அந்தந்த மாநகசபைகளிடம் 1997ல் கையளிக்கப்பட்ட பின்னர், இவைகளைச் சேகரிப்பது குறைந்து வருவதையும் இவர் குறிப்பிட்டுள்ளார்.

# வருடத்துக்கு $1,500 முதியோருக்கு வரிச்சலுகை

இந்த வருடம் அக்டோபர் முதலாம் திகதிக்குப் பின்னர் தமது வீடுகளை/இருப்பிடங்களைத் திருத்தம் செய்யும் முதியவர்களுக்கு வரிச்சலுகை வழங்கும் திட்டத்தை ஒன்ராறியோ மாகாண அரசாங்கம் அறிவித்துள்ளது. வீடுகளைச் சொந்தமாக வைத்திருக்கும் முதியவர்கள், வாடகைக்கு இருக்கும் முதியவர்கள், மற்றும் முதியவரான உறவினரைத் தம்முடன் வைத்திருப்போர் இந்தத் திட்டத்துள் அடங்குகின்றனர். ஆகக்கூடிதாக பத்தாயிரம் டாலர் திருத்தச் செலவில் 15 வீத வரிச்சலுகைக்கு இவர்கள் உரித்துடையவர்கள். ஆனால், வருடமொன்றுக்கு ஆகக்கூடியதாக 1,500 டாலர்களையே வரிச்சலுகையாகப் பெறமுடியும். மிகுதிப் பணத்துக்கு அடுத்து வரும் வருடங்களில் விண்ணப்பிக்கலாம். ஆதலால், செலவு செய்வதற்கான பற்றுச் சீட்டுகளை கவனமாக வைத்திருக்க வேண்டுமென இவர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

HERITAGE
Education Funds
RESP
SAVINGS PLAN
கல்விச் சேமிப்புத் திட்டம்

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

EDUCATION IS
A GREAT GIFT FOR
YOUR FUTURE GENERATIONS

உங்கள் பிள்ளைகளின்
கல்விக்கான சேமிப்பு உங்கள்
எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

INCOME TAX
PREPARATION

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647.219.7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"THINKING OF BUYING OR SELLING"

**Residential and Commercial Buying / Selling & Leasing**

DIAMOND CLUB AWARD - 2010 | GOLD CLUB AWARD - 2009

*Thanks to all my clients for their continuous support & a special thanks to all of my first time buyers*



**Raja V.S. Rajagopal**
Sales Representative
**Dir : 416.727.8647**
Email: sinnahrajagopal@gmail.com

Make the Right Move, at the Right Time, with the Right Professional

**HomeLife /Future Realty Inc.,**
Brokerage*
205-7 Eastvala Drive, Markham Road, Ontario L3S 4N8
**Bus.: 416.264.0101**
Fax : 905.201.9229
*Independently Owned and Operated, REALTOR




எஸ். காந்தி

# வெள்ளிப் பணம்

60

இம்முறை வெள்ளிப்பண தொடரில் "விடுமுறைக்கால செலவும் நாமும்" என்கின்ற தலைப்பில் சில தகவல்களைப் பரிமாறிக்கொள்வோம்.

வருடத்தில் மார்கழி மாதம் பொதுவாகவே மேற்கத்தைய நாடுகளில் ஒவ்வொரு குடிமகனுக்கும் அல்லது குடும்பத்துக்கும் செலவுகள் அதிகரித்துச் செல்லும் மாதமாகக் காணப்படுகின்றது. காரணம் - நத்தார் பண்டிகை விடுமுறைக்காலம் (Christmas Holiday season) ஆகும். இந்த விடுமுறைக்காலம் மதரீதியான சடங்கு சம்பிரதாயங்களைக் கடந்து இன்று குளிர்கால விடுமுறைக் கொண்டாட்டமாகவும் சிறுவர்களுக்கு கிறிஸ்மஸ் தாத்தாவின் அன்பளிப்பை எதிர்பார்க்கும் ஒரு மகிழ்ச்சி தரக்கூடிய காலமுமாக மார்கழி மாதத்தின் இறுதி இரு வாரங்களும் அமைகின்றது.

இது மாத்திரமல்ல - மார்கழி மாதம் 26ஆந் திகதி Boxing Day என அழைக்கப்படும். அன்று எல்லா நிறுவனங்களும் தமது பழைய இருப்புக்களை (Inventories) விற்றுத் தீர்க்கும் நாளாக குறியீடு செய்யப்பட்டு மிகவும் குறைந்த விலையில் விளம்பரம் செய்யும் நடைமுறையும் உண்டு. இக்காலத்தில் சிலர் தற்பொழுது தமக்குத் தேவையற்ற பொருளைக்கூட கடன் அட்டையில கொள்வனவு செய்து அதற்கு 20 சதவீத வட்டி செலுத்துவதை நடைமுறையில் கண்டுள்ளோம்.

நாமும் இக்காலத்தில்தான் உறவினர், நண்பர்கள், கூட வேலைபார்க்கும் நண்பர்கள், இப்படியானவர்களை வீட்டுக்கு அழைப்பதும் அவர்கள் எம்மை அழைப்பதும் பரிசுப் பொருட்கள் கைமாறுவதும் சாதாரண நடைமுறையாகின்றது. எனவே, இந்தக் காலத்தில் தான் பலருடைய சேமிப்புக்கள் கரைவதும், கடன் அட்டையில் கடன் தொகை ஏறுவதுமாக இருக்கின்றது. எனவேதான் இக்காலத்தில செலவுகளை மேற்கொள்ளும்போது பகுத்தறிவின் துணைகொண்டு சிக்கனமான வழிமுறையில் செலவுகளை மேற்கொண்டு விடுமுறைக் காலத்தினை மகிழ்ச்சியாகக் கொண்டாடுமாறு நிதி ஆலோசகர்கள் ஆலோசனை கூறுகின்றனர்.

அவர்கள் கூறும் ஆலோசனைகளில் சில:

1. முதலாவதாக, நீங்கள் எவ்வளவு தொகை செலவு செய்யமுடியும் என்பதனை உங்கள் வருமானத்துக்கு ஏற்ப தீர்மானித்துக்கொள்ளுதல்.
2. வருட ஆரம்பத்திலிருந்தே இதற்காக சிறிய தொகையைச் சேமித்து வரும்பொழுது வருட இறுதியில கடன் அட்டையில் கடன் சுமை ஏறவிடாது தவிர்த்துக்கொள்ள முடியும்.
3. பரிசுப் பொருட்களை வாங்கும்பொழுது மலிவு விலைக் கூப்பன்கள் பாவிப்பதும், மற்றும் இதற்கு முந்திய மாதங்களில் வெவ்வேறு கடைகளில் மலிவு விலைகளில விளம்பரப்படுத்தும்போது சென்று வாங்கி வைத்திருப்பதும் புத்திசாலித்தனமாகக் கருதப்படுகின்றது.
4. விருந்துபசாரத்திற்காக சமைத்த உணவுப் பொருட்களை வாங்குவதனை விடுத்து தாமே உணவுப் பொருட்களைச் சமைப்பதன் மூலம் செலவகளைக் கட்டுப்படுத்த முடியும்.
5. அவரவர் தத்தமது பொருளாதார வசதிக்கு ஏற்ப Party என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் நிகழ்வுக்கு பணத்தினைச் செலவுசெய்து உறவினர்களுடனும் நண்பர்களுடனும் மானசீகமான மனிதநேய உறவுகளை மேம்படுத்த வேண்டுமே தவிர ஏட்டிக்குப் போட்டியாக இந்த நிகழ்வுகளை நடத்துவது பொருளாதார சமூக ரீதியிலும் ஆரோக்கியமாக அமைய முடியாது.
6. சமூக அமைப்புகள், பாடசாலை பழைய மாணவர் அமைப்புகள், ஊர்ச் சங்கங்கள், மற்றும் தொண்டர் நிறுவன அமைப்பு நடத்தும் ஒன்றுகூடல் விழாக்கள் பலரை ஒரு இடத்தில் ஒன்றுகூடவைத்து எல்லோரையும் ஒரு இறுக்கமான பிணைப்பில் வைத்திருக்க உதவுகின்றது. இது தனிப்பட்ட ஒருவருக்கு ஒப்பீட்டு ரீதியில் அதிக செலவும் இல்லை; தனிப்பட்ட முறையில் எவருக்கும் கடமைப்பாடும் இருக்காது.
7. உடல் ஆரோக்கியமும் உள ஆரோக்கியமும் பொருண்மிய ரீதியில் சிக்கனமான விடயமாகும். இவை இரண்டும் சரியாக இல்லாவிட்டால் தொழில்செய்து வருமானம் ஈட்ட முடியாது. எனவே, உங்கள் உடல் ஆரோக்கியத்துக்கு ஒவ்வாத உணவுப் பொருட்களைத் தவிர்ப்பதும், ஆண்கள் அளவுக்கதிகமாக மது அருந்தி, வாகனம் ஓட்டி கனடாவின் குற்றவியல் சட்டத்துக்குள் சிக்குப்படாமல் இருப்பதும் ஒரு முக்கியமான விடயமாகும்.

மேற்சொன்ன விடயங்களைக் கருத்தில்கொண்டு உங்கள் விடுமுறைக் காலங்களை மகிழ்ச்சியாக செலவிடுங்கள்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**TAMILSYELLOWPAGES.COM**

பிறந்த நாள் முதல் இறந்த நாள் வரை உங்கள் அனைத்துச் சேவைகளையும் பூர்த்தி செய்வதற்கும்

உங்கள் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான தொப்பி முதல் பாதஅணிவரை அனைத்துத் தரமான பொருட்களை குறைந்த விலையிலும், துரிதமாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய வர்த்தக **WEB SITE**

**Mobile: 416-752-4444**
**Tel: 416-644-7273**
**E-mail: tamilyp@gmail.com**

## இரத்தக் குழாய்கள்..

சாப்பிடுவதால் எங்களுடைய உடலும் உள்ளமும் எவ்வளவோ நன்மைகளை அடையும் என்று இப்போது மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இந்த வேளையில் எம்முடைய சான்றோர் எத்தனையோ நூற்றுக் கணக்கான வருடங்களுக்கு முன் கூறிய வாக்கை நினைவு படுத்த விரும்புகின்றேன். 'அதாவது புலால் உண்ணாதே' என்பதே. மேற்கூறிய மாமிச உணவுகளில் மாத்திரமன்றி நாம் அருந்தும் பசுப்பாலிலும் இந்த மாதிரியான கொழுப்பு காணப்படுகின்றது. ஆகவே கொழுப்புத் தன்மை குறைக்கப்பட்ட பாலை அருந்துவது நல்லது. அதாவது 1% அல்லது 2% கொழுப்புள்ள பாலை அருந்துவது நல்லது. கொழுப்பு மிக மிகக் குறைந்த பாலை Skim milk என்று கூறுவார்கள். இதை இரத்தாசய நோய் உள்ளவர்கள் அருந்தலாம். கணவருக்கு அறுசுவையாக சமைத்து பரிமாறும் பெண்களுக்கு ஒரு வார்த்தை கூற விரும்புகின்றேன். எங்களுடைய சமையல்களில் நாங்கள் அதிகமாக எண்ணெய் பாவிக்கின்றோம்.

முருங்கைக்காயை எண்ணெயில் பொரித்து, அதோடு கொஞ்ச தேங்காய் பாலையும் விட்டு முருங்கைக்காய் பிரட்டல் காய்ச்சினால் நன்றாக அவர் விரும்பிச் சாப்பிடுவார் என்று எங்களுடைய பெண்கள் சமையலறையில் அரைவாசி நேரத்தை போக்கக்கூடும். கத்தரிக்காயை எண்ணெயில் பொரித்து பின்பு பிரட்டல் கறி காய்ச்சினால் மிக மிகச் சுவையாகத்தான் இருக்கும். பருப்புக் கறியில் கொஞ்சம் கடுகு சீரகத்தையும் வெங்காயத்தையும் எண்ணெயில் தாளித்து கலந்தால் சொர்க்கமாகத்தான் இருக்கும். அந்தப் பருப்புக் கறியில் கொஞ்சம் பசுவின் வெண்ணையையும் கலந்து சாப்பிட்டால், அதன் உருசியை இங்கு சொற்களால் வர்ணிக்க முடியாது. இவையெல்லாம் மரக்கறி வகைகள் தான்; ஆனால் நாங்கள் எண்ணெயை அதிகம் பாவிப்பதால் எங்களுடைய கணவர்மாருக்கு LDL Cholesterol ஐ இரத்தத்தில் கூட்டுகிறோம். நாங்கள் கடையில் வாங்கும் Vegetable எண்ணை வகைகளிலும் சிறிதளவாவது Saturated fatty acids இருக்கத்தான் செய்யும். ஆகவே எங்களால் இயன்ற அளவு எண்ணெயில் பொரிப்பதையும் வறுப்பதையும் குறைத்தால் நல்லது. இதை கணவர்மாரும், மனைவிமாரும் உணர்ந்து அதற்கேற்ற முறைகளைக் கையாளலாம். இந்த டாக்குத்தரினால் எனக்கு வீட்டில் நல்ல சாப்பாடு இல்லை என்று ஆண்கள் குறை கூறக்கூடும். அதற்காகவே தம்பதிகள் இருவரும் கதைத்துச் செயற்பட வேண்டும் என்று குறிப்பிடுகின்றோம்.
(அடுத்த இதழிலும் வரும்)

**The Children's Education Trust of Canada**
offered to the public by

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து 7200 டாலர்கள் வரை கனடா அரசாங்கம் வழங்கும் நன்கொடையைப் பெற்று (20 வீத Grant) உங்கள் பிள்ளைகளதும் பேரப்பிள்ளைகளதும் கல்வி வாய்ப்பை ஊக்குவியுங்கள்.

**சமூக நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்ற**

சிவா கணபதிப்பிள்ளை

**அவர்களை அழைத்து விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca

# கனகாம்பிகை நகை மாளிகை

இப்பொழுது இரண்டு இடங்களில்

## Kanagaambikai Gold House

### Now in Two Locations

சிங்கப்பூர் மற்றும் துபாயிலிருந்து தருவிக்கப்பட்ட 22K தங்க நகைகள்
ராசிக் கற்கள், நவரத்தின மோதிரங்கள், மற்றும் பழைய நகைகளைப் புதுப்பித்துக்
கொள்ளவும் எங்களிடம் வாருங்கள்!



We sell
Singapore & Dubai Jewelleries
Finest quality 22k gold, diamonds
Birth Stones, Navarathna Rings,
Watches, Custom made jewelleries.
All kind of repairs &
pawning gold items.

**மார்க்கம் & எக்லின்ரன்**
3160 எக்லின்ரன் அவினியு கிழக்கு
ஸ்காபரோ, ஒன்ராறியோ
**416 269 7197**

**பிறிம்லி & எக்லின்ரன்**
2613 எக்லின்ரன் அவினியு கிழக்கு
ஸ்காபரோ, ஒன்ராறியோ
**416 269 7198**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •
JRB Universal Inc.
Almost All Services Available
647 289 6164

R.R. Rajkumar
B.Com (Hons), M.B.A.
Scholarship Plan [RESP]
Any Referral Service
• Credit Counseling • Accounting & Tax Services •

## பெற்றோர் ஸ்பொன்சர்...

திறந்து விடுகின்றது. ஆனால், எல்லாமே எவ்வாறு இவை நடைமுறைப்படுத்தப்படும் என்பதிலேயே தங்கியுள்ளது.

லஷ்மி வாசன்: தேக்க நிலையிலுள்ள விண்ணப்பங்களை விரைவாக முடித்து வைக்க நடவடிக்கை எடுப்பது நல்லது. இதற்கு வேண்டிய அலுவலகப் பணியாளர்களை நியமித்து வேலையை முடிக்கலாம். மாறாக, இரண்டு வருடங்களுக்கு ஸ்பொன்சரை நிறுத்தக்கூடாது. பெற்றோர், பேரர்கள் என்போர் வயதில் மூத்தவர்கள். தங்கள் நாட்டில் தனிமையில் வாடுபவர்கள். இரண்டு வருடங்களுக்கு இவர்களை ஸ்பொன்சர் செய்வதைத் தடுப்பதால் அவர்கள் தாய்நாட்டில் தனிமையிலிருந்து தவிக்க நேரிடுகின்றது. அவர்கள் புதுப்புது நோய்களுக்கு உள்ளாகலாம். சிலர் மரணித்து விடவும் வாய்புண்டு. இக்காலத்தில் பெற்றோரின் பராமரிப்பிலுள்ள பிள்ளைகள், ஸ்பொன்சர் வயதெல்லையைத் தாண்டி விடுவர். இவைகளை அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்திருக்க வேண்டும். சில வருடங்களுக்கு முன்னர் திருமணம் புரிந்த இளம் தம்பதியர், இரவு பகலாக தொழில் புரிந்து உரிய வருமானத்தைப் பெற்று பெற்றோரை இங்கு ஸ்பொன்சரில் வரவழைக்க முனையும்போது, இப்படியாக இரு வருடங்களுக்கு நிறுத்துவதால் அவர்கள் மனநிலை பாதிக்கப்படுகின்றது. ‘சூப்பர் ஸ்பொன்சர்’ என்பது பெற்றோர், மற்றும் பேரர்களுக்கு மட்டும்தான். அவர்களின் பராமரிப்பிலுள்ள பிள்ளைகளை உள்ளடக்காது. அத்துடன், தனியார் மருத்துவக் காப்புறுதி, விண்ணப்பக் கட்டணம் என்று பெருந்தொகை பணத்துடன் சம்பந்தப்பட்டது. இது எம்மவருக்கு பெருமளவு சாத்தியமாக அமையாது.

நாகா இராமலிங்கம்: அரசாங்கம் அறிவித்துள்ள இரண்டு புதிய திட்டங்களும் ஏற்கக்கூடியவையல்ல. முக்கியமாக இலங்கைத் தமிழர்களுக்குப் பாதிப்பே அதிகம். உதாரணத்துக்கு, சுனாமியால் பாதிக்கப்பட்டு இங்கு வந்து குடியேறியவர்களை எடுத்துக் கொள்ளலாம். இவர்கள் கனடாவில் தங்களை ஓரளவுக்கு ஸ்தாபித்த பின்னர், இப்போதுதான் தங்கள் பெற்றோர் மற்றும் சகோதரர்களை ‘ஸ்பொன்சர்’ செய்ய தகுதியாகியுள்ளனர். இவ்வேளையில், அதனை இரண்டு ஆண்டுகளுக்கு நிறுத்துவது அவர்களை வெகுவாகப் பாதிக்கின்றது. இரு வருட ஸ்பொன்சர் இடைநிறுத்தம், இரண்டு வருட முடிவில் ரத்தாகுமென்பதற்கு என்ன உத்தரவாதம்? அமைச்சர் விரும்பினால் இதனை மேலும் மேலும் நீடிக்கலாம். மொத்தத்தில், இதனால் பாதிக்கப்படுபவர்கள் முதுமை நிலைக்கு வந்துள்ளவர்களே. அதேசமயம், இங்குள்ள அவர்களின் பிள்ளைகளும் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். ‘சூப்பர் விசா’ என்பது எங்கள் சமூகத்துக்கு பலனளிப்பதாகாது. (சிலசமயம், மேற்குலத்தவர்களுக்கு வாய்ப்பாகலாம்). நீண்ட காலம் பிரிந்திருக்கும் எங்கள் பெற்றோர் நிரந்தரமாகத் தங்கள் பிள்ளைகளுடன் இணையவே விரும்புகின்றனர். வசதியுள்ள பெரும் வர்த்தகர்களைப் போல விசாவில் வந்து போக அவர்களால் முடியாது. இந்த விடயங்களில் சமூக அமைப்புகள் அக்கறை காட்டாதிருப்பது கவலை தருகின்றது.

# சென் ஜேம்ஸ் பூங்காவின் ரொறன்ரோ ஆக்கிரமிப்பு 39 நாட்களில் முடிவுற்றது

ரொறன்ரோ ஆக்கிரமிப்பு (Toronto Occupy) என்ற பெயரில் நடைபெற்ற கவனயீர்ப்பு நிகழ்வு 39 நாட்களின் பின்னர் சட்ட ரீதியான தீர்ப்புக்கிணங்க சுமுகமாக நிறைவுற்றது. சர்வதேச ரீதியாக பல நாடுகளின் முக்கிய நகரங்களில் ‘ஆக்கிரமிப்பு’ என்ற பெயரில் இது ஆரம்மாகி நடைபெற்று வருகின்றது. ‘செல்வந்தர்கள் செல்வந்தர்களாகவும், வறுமையில் வாழுபவர்கள் வறியவர்களாகவே வாழ்கின்றனர்’ என்பதை மாற்ற வேண்டுமென்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு இப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ரொன்ரோ மத்தியிலுள்ள சென். ஜேம்ஸ் பூங்காவில் நூறுக்கும் அதிகமான கூடாரங்களை அமைத்து, 39 நாட்கள் இரவும் பகலும் அதனை ஆக்கிரமித்து பல நூற்றுக் கணக்கானவர்கள் மிகவும் அமைதியாக இருந்தனர். சமையல் இடம், நூலக வசதி, ஊடகவியலாளர் சந்திப்பு ஆகியவைக்கென நவீன வசதிகளுடன் தனித்தனியான பகுதிகள் இங்கு அமைக்கப்பட்டிருந்தன.


ரொறன்ரோ நகர சபை இவர்களை வெளியேற உத்தரவிட்டதை அடுத்து, ஆக்கிரமிப்பாளர்கள் சட்ட நடவடிக்கையை எடுத்தனர். ஆனால் நீதிமன்றத் தீர்ப்பு இவர்களுக்கு எதிராகவே அமைந்தது. கடந்த மாதம் 22ஆம் திகதி இவர்கள் எந்தவித எதிர்பபுமின்றி பூங்காவிலிருந்து அகன்றனர்.

இருப்பினும், எந்த இடத்திலும் முகாமிட்டு இரவினில் தங்காது பகல் வேளையில் இவர்கள் தங்கள் கவனயீர்ப்பை நிகழ்த்த முடியுமென்ற நீதிமன்றத் தீர்ப்பை இவர்கள் தங்களுக்கான வெற்றியாகக் கருதுகின்றனர். “ஒரு பூங்காவிலிருந்து வெளியேற்றப்பட்டதால் எமது போராட்டம் முற்றுப் பெறவில்லை. இது தொடரும்” என்று இவர்கள் ஊடகங்களிடம் தெரிவித்து உள்ளனர். தினசரி இரவு 7 மணிக்கு ரொறன்ரோ நகரசபை முன்றலில் (நேதன் பிலிப் ஸ்குயர்) கூடப்போவதாக இவர்கள் அறிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CGA
THE NAME YOU NEED FOR YOUR BUSINESS



Phone: 416-494-4777
Cell: 416-888-1128
Fax: 416-494-4050
E-mail: nimal@nlraccounting.com

NIMAL VINAYAGAMOORTHY
Certified General Accountant

2525 Pharmacy Ave. (Pharmacy & Finch), Toronto, Ontario M1W 2K2

**Tamil activists...** peace and justice to the crisis in the island, in order to facilitate the two nations in conflict to co-exist peacefully with full control of their respective sovereignties.

We also declare that the symbols and expressions of the national struggle of Eelam Tamils should not be vilified but upheld, all those who have laid down their lives for the cause of the liberation of Eelam Tamils should be recognized and all democratic forces all over the world should contribute to a co-ordinated global action resulting in a political solution to the liberation struggle of Eelam Tamils.

Poongkuzhali Nedumaran, Tamil Nadu, India
Rajeev Sreetharan, Washington DC, USA
Krisna Saravanamuttu, Toronto, Canada
Lathan Suntheralingam, Luzern, Switzerland

[TamilNet, Sunday, 27 November 2011]






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tamil activists assert sovereignty, declare for plebiscite

Leading Tamil activists of the younger generation in Tamil Nadu, Canada, USA and Switzerland, came out with a declaration on Sunday for an international decision to conduct and monitor a plebiscite among the people of North and East descent in the island, in the diaspora and among the refugees in India and elsewhere, in order to decide on the creation of an independent and sovereign Tamil Eelam. The activists asserted sovereignty of Eezham Tamils on three counts: historical, earned and remedial. They also declared that international players should stop insisting on united Sri Lanka and drop pretensions of 'domestic solutions'. Further declarations upheld symbols and expressions of the struggle, urged recognition of all those who laid down their lives for the liberation cause and called upon coordinated global action by democratic forces.



Poonkuzhali Nedumaran, Tamil Nadu, Krishna Saravanamuttu, Canada, Rajeev Sritharan, USA and Lathan Suntheralingam, Switzeraland, after discussions with a wide spectrum of activists of their genre, have come out with the following declaration:

**Tamil Sovereignty Cognition**

Declaration on universal justice to the national question of Eelam Tamils

The undersigned civil society activists living in Tamil Nadu, Canada, United States of America and Switzerland, after interactions and deliberations with a wide-spectrum of like-minded people, especially the younger generation, in the island of Ilangkai / Sri Lanka, Tamil Nadu and in the diaspora come out with the following declaration with an aim of upholding peace and universal justice by addressing the chronic national question of the Eelam Tamils in the island, where genocidal and structural genocidal approaches continuously deployed against the Tamil people in their homeland in the North and East of the island, by the Sri Lankan state with tacit approval of world powers, threaten peace and stability of peoples in South Asia and set a dangerous paradigm to the entire world:

We therefore declare that there should be an international decision to conduct and monitor a plebiscite among the people of North and East descent in the island of Sri Lanka, in the diaspora and among the refugees in India and elsewhere, to decide on the creation of an independent and sovereign state of Tamil Eelam.

The declaration is based on the Historical Sovereignty and Earned Sovereignty of Eelam Tamils as well as on the applicability of the principle of Remedial Sovereignty in their case.

Historical Sovereignty: The Eelam Tamils are a nation in the island since the times of the earliest known documentary evidences, culminating into having their historically and geographically defined homeland, distinct language, culture and collective consciousness. They have a history of losing sovereignty to Portuguese colonial conquest, followed by the Dutch and the British and not regaining it by the end of European colonialism. They have a continued history of democratically struggling to share sovereignty with the Sinhala nation for 30 years since the independence of Ceylon, the failure of which culminated into the historic declaration of independence in 1976, endorsed by mandate of the people of the North and East in the 1977 elections.

Earned Sovereignty: At the failure of democratic means, another 30 years of militant struggle impelled by state oppression, culminated into Eelam Tamils earning sovereignty in a de facto state that was tacitly recognized in an international-backed peace process in 2002. The Tamil political body identified by the de facto state winning the elections in 2004 shows the endorsement of Eelam Tamils to the de facto state that came into being by Earned Sovereignty.

Remedial Sovereignty: The tilt of balance against the de facto state ending in genocide is now indirectly acknowledged by the UN panel report and Norway's evaluation report of the peace process, even though the word genocide is not used. An explicit, intense, intended and accelerated process of structural genocide in the North and East is now marked by occupation and rule of the Tamil homeland by ethnically Sinhala military of the Sri Lankan state; by military-backed Sinhala colonization for demographic changes and deliberate gerrymandering of Tamil constituencies and by total socio-economic-cultural subjugation of the Tamil homeland caried out by various state agencies. This impels evoking the Right to Protect the Eelam Tamil nation from annihilation. The principle of Remedial Sovereignty is therefore applicable to the Eelam Tamils claiming independence to protect them from genocide and structural genocide.

We the undersigned declare that all outside players should stop insisting on finding solutions only within a united Sri Lanka.

We declare that it is time for the international players to drop pretensions of 'domestic' solutions and vigorously engage in a transparent international mechanism to approach the Sri Lanka - Tamil Eelam conflict as question between nations and to bring in lasting

(Contd. on Pg:33)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BRACE FOR A GREAT SMILE

# DR. ILLANGO & ASSOCIATES

*Dental Office*

பல் சிகிச்சை நிலையம்

**பல் சிகிச்சையில் சகல துறைகளிலும் எமது சேவை**

## Dr. M. ILLANGO
B.D.S Dip.Orth. (Oslo), General Practitioner Mainly Orthodontics
பற்களை ஒழுங்குபடுத்தும் பல் வைத்தியர்

## Dr. ALI ADIBFAR
D.D.S, M.D, F.R.C.D (C), Oral Surgeon

## Dr. MEHRAN MOJGANI
D.D.S. Dip. Perio, Gum Specialist
பல் முரசு வைத்திய நிபுணர்

## Dr. JANAKI ILLANGO
B.D.S.
குடும்ப பல் வைத்தியர்

## Dr. TEHCHIN HSIEH
D.D.S
குடும்ப பல் வைத்தியர்




**Scarborough Office**
3852 Finch Ave. E, Units 204, 303
Scarborough ON
**416 • 292 • 7004**

*Moved to new location*
**Brampton/Mississauga**




7920 Hurontario Street, Unit 37
(Hurontario & Steels Ave.)
Brampton ON L6Y 0P7
**905 • 457 • 1700**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585

ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

## சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்

(ஜயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை

தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்


**416-266-3333**

628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500

# NKS Draperies & Blinds

**210 Silver Star Road, Unit. 825**
**(Midland & Finch) Scarborough, ON**
**416 321 6420**





- **Vertical blinds**
- **Venetian blinds**
- **Draperies**
- **Curtains**
- **Shutters**

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org